சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

61. கொலுமாட்சியும் கோபமாட்சியும்

தோரண மணி வாசலின் மேலிடத்திலே, மழை கொட்ட நீர் அணைத்து நிற்கும் கருமேகம் போல நின்று கொண்டிருக்கிறான் ராவணன் என்பதை இந்த வருணனைப் பகுதியின் சிகரமாக்குகிறான் கவி. ராவண சித்திரம் படிப்படியாக வளர்ந்து கடைசியாக,

தோர ணத்தின்மணி-
வாயில் மிசைச்சூல்
நீர ணைத்தமுகி
லாமென நின்றான்.

[மணிவாயில் மிசை — மணி வாசலின் மேலிடத்தில். சூல் நீரணைத்த – கருவாகக் கொண்ட.]
என்று பூர்த்தியாகிறது.

ஒரு சிறப்பியல்பு

ராமனும் 'வாளிப்பெருமழை சொரியத் தோன்றும் ...... காள மா மேகம் ஒத்தான்' என்றே வருணிக்கப்பட்டான், இலங்கை காணும் நிலையில். அது தர்மாவேசம்; இது அதர்மாவேசம்.

அவன் 'விமலத்திண் சிலையன்.' குணமென்னும் குன்றேறி நிற்பவன். இவனோ மலையான குற்றத்தின் சிகரம்; ஸர்வாதிகாரத்தின் உச்ச நிலை.

பல பாடல்களில் ராவண படாடோபத்தையும் அதிகார ஆடம்பர வைபவங்களையும் வருணித்த பின், இந்த ராவணன் ராமனைக் கண்டான் என்று சொல்லி முடிக்கும்போது, ராமனுடைய மாட்சிக்கும் தேஜஸுக்கும் ரஸிகருள்ளத்தில் ஒரு பங்கமும் ஏற்பட்டு விடக்கூடாதல்லவா? இதற்காகக் கம்பன் கையாளும் உபாயம் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது.

பிரமாதமாக வளர்ந்து வந்திருக்கிறது ராவணனுடைய முழுச் சித்திரம். அவன் ராமனைக் கண்டானென்று முடிக்கும்போது அப்படி ஒரு பெருஞ் சித்திரத்திலே ராமனைச் சுட்டிக் காட்ட இயலாதல்லவா? சுருங்கச் சொல்லி இந்த ஒரே பாட்டில் அந்த ராவணன் இந்த ராமனைக் கண்டானென்று கூறி முடித்திருப்பது தானே முறை.

பல பாடங்களில் ராவண சித்திரத்தை வளர்த்துக் காட்டிய கவிஞன், இந்தக் கட்டத்தில் இந்த இறுதிப் பாட்டிலும் பாதியை ராவண மாட்சிக்கே உரியதாக்குகிறான். அடுத்த பாதியிலும் ஒரு பகுதியைத் தான் ராம தேஜஸையும் மாட்சியையும் குறிப்பிட வைத்துக் கொள்கிறான்.


எனினும் ராவணேச்வரனது மாட்சியையும் வென்றுவிடுகிறது ராமனது தேஜஸ் என்ற கருத்து ரஸிகருள்ளத்தில் நன்கு பதிந்து விடுகிறது. அவ்வளவு மாட்சியும் ராமனது நிலைக்கு முன் சூரியனுக்கு எதிரே ஆடும் மின்மினிதான் என்று சொல்லும்படியான ரீதியில் இந்த இறுதிப் பாட்டு உருவாகிறது.

பாட்டைப் பாடி ஓதி ஓதி அனுபவிப்போர் மேலே சொன்ன உண்மையை எளிதில் கண்டு கொள்வர்

தோர ணத்தின்மணி
வாயில் மிசைச்சூல்
நீர ணைத்தமுகி
லாமென நின்றான்,
ஆர ணத்தமுதை
அம்மறை தேடும்
கார ணத்தைநிமிர்
கண்கொடு கண்டான்.

மகாகவிதையின் மாட்சிக்கு முன் மகாராஜ்யங்களை ஆளும் மாட்சியும் கூசிக் குலைவது போலக் குலைந்து காண்கிறது 'விசுவரூபம்' எடுத்த ராவண ஆணவமும் ராம தரிசனத்திலே!

'சக்கரவர்த்திகளின் அதிகார ஆடம்பரங்களை யெல்லாம் எள்ளி நகையாட



வைப்பேன்!' என்ருர் அறிவு - மாட்சி வாய்ந்த மேலைநாட்டுப் பெரியார் ஒருவர்.

கோவின் தே(சு)எதிர்
 கூசிக் குலைவது,

பாவின் பாவெனும்
 கம்பன்மெய்ப் பாவினுல்

[கோவின் - சக்ரவர்த்தியின். தேசு - தேஜஸ்.]

என்பது அண்மையில் ஆராய்ச்சி - அறிஞராகத் திகழ்ந்த ஒருவர் வாக்கு.

ராவணேச்வரனது சக்ரவர்த்தி-மாட்சி எதிர் கூசிக் குலைந்துபோகுமாறு,

ஆரணத்தமுதை,
 அம்மறை தேடும்

காரணத்தை......

என்று ராமனது தெய்விக மாட்சியை அமைத்துக்காட்டும் பாட்டைப் 'பாவின் பா' என்று கூறுவது பொருத்தம் தானே!

ராவணனை எவ்வளவு ஸ்தூலமாக வருணனைக்கு மேல் வருணனை செய்து காட்ட முடியுமோ அப்படிக் காட்டி விட்டு, ராமனை அதி சூட்சுமமாக, மகா சக்தி வாய்ந்த சூட்சுமமாகக் காட்டுவது இந்தக் கலைத்திறனின் சிறப்பியல்பு.

மெலிந்த தோள்கள் பூரித்துப் பொலிய முதன் முதல் தோன்றுகிருன் ராவணன். தோளுக்கு மேலாகப் பூரித்துச் செல்லும் மனமும் ஆணவமும் 'உஸ்' என்று படமெடுக்கிற அதிசயத்தையும் பார்க்கிறோம்.

'ராஜாதி ராஜ' சின்னங்களான குடையும் சாமரமும் ராவணனது ஸ்தூல மாட்சியை எடுத்துக் காட்டுகின்றன. அங்க ரட்சர்களும் கஞ்சுகியர்களும், பிரம்பு கதை, வில் வாள் முதலான ஆயுதங்களோடு கூடியவர்களும், ஸ்தூல பலம் எந்த மாட்சியை நம்பி ஆட்சி நடக்கிறதோ அந்த மாட்சியைத் தான் உறுதிப் படுத்துகிருர்கள்.

வாத்திய கோஷங்களும் கீத வாத்திய விநோதங்களும் ஒருங்கே ராவணனது ஸ்தூல மாட்சிக்கே ஜய கோஷம் செய்கின்றன.

நஞ்சு அஞ்சும் விழிகளும், நஞ்சு கக்கும் விழிகளும் எல்லாம் ராவணனது ராஜவிழிக்கு அஞ்சி நடுங்கும் விழிகளே. 'எரி வீசி விழி'த்தால் என்ன!— கூசி விழித்தால் என்ன? எல்லாம் அடிமை விழிக்கும் விழி தானே!

இவ்வளவு ஸ்தூல மாட்சிக்கும் சிகரம்; தோரணமணி வாசல் மீது நிரலணைத்து நிற்கும் கரு முகில்! இதற்கு மாருக நிற்கிறது ராமன் என்ற நீலமேகத்தின் நிர்மல வசீகரம்!

ஒரு படாடோப நகரத்தை 'இனி அது இல்லை!' என்று சொல்லுமாறு செய்து விடுகிறதல்லவா " அணுவின் சக்தி! அணுவைப் பிளந்து அப்படி ஒரு சக்தியைக் காட்டுவது போல, சிற்சில சாதாரணச் சொற்களிலிருந்து ஒரு மகத்தான சக்தியைப் புலப்படுத்தி 'அதோ ராமன்!' எனக் காட்டுகிருன் கவிஞன்.

இத்தகைய கவித் திறன் உலக மகா கவிகளுக்கே சாத்தியமாகும். கம்பனது இத்தகைய கவிச் சிறப்பிற்கு இவனது ராமபக்தி ஓர் அற்புதத் தூண்டுகோல்.

ராவண மாட்சி தன்னை அறியாமலே கூசிக்குலைந்த போதிலும், ராவண கோபம் அதிகரிக்கத்தான் செய்கிறது. அது கண்களில் எரிகிறது; நெஞ்சிலும் பற்றி எரிகிறது.

அந்தக் கோபத் தீயையும், துர்நிமித்தமாக ராவணன் காண்பதையும் வருணிக்கும் இசைச் சித்திரம் இது :

மடித்த வாயினன்
 வயங்கெரி வந்து

பொடித்தி ழிந்தவிழி,
 இன்னது போழ்தின்

இடித்த வன்றிசை ;
எரிந்தது நெஞ்சம் ;

துடித்த கண்ணினொ(டு)
இடத்திரள் தோள்கள்,

[மடித்த வாயினன் – உதட்டை மடித்துக் கவ்விய வாயை உடையவனான ராவணன். வயங்கு எரி – ஒளிர்கின்ற நெருப்பு. பொடித்து உமிழ்ந்த – சிறு சிறு பொடி போல வெளிப்பட்டது விழி – விழிகளிலிருந்து. இன்னது போழ்தின் – அப்போது. இடித்த – இடிபோல ஓசை தோன்றிற்று. வன்றிசை – வலிய திசை எங்கும். துடித்த–துடித்தன. கண்ணினொடு இடத் திரள் தோள்கள் – இடக் கண்ணும் இடது தோளும்.]

ராமனைப் பார்த்ததுமே கோபம் பொங்கி விடுகிறது ராவணனுக்கு. அந்த வசிகரமான சூட்சும ஜோதி ராவணனை வசிகரித்து விடவில்லை; எதிர்ப்பையும் கோபத்தையுமே மூட்டுகின்றன.

உதட்டை மடித்துக் கவ்விய வாயுடன் ராமனை நோக்குகிறான். கண்களிலிருந்து, கொழுந்து விட்டெரியும் கோபத் தீ, சுடர்ப்பொறிகளாய், கங்குப் பொடிகளாய் வெளிப்படுகிறது, —அந்த 'மறைதேடும் காரணத்தை' அப்படியே எரித்து விடப் பார்ப்பது போல. ஆனால் பற்றி எரிகிறது ராவணனுடைய நெஞ்சு தான் !

இந்தக் கோபாவேசத்திலே நெறு நெறுவென்று பற்களைக் கடிப்பது போன்ற ஓசையும் நிகழ்கின்றது. இந்த ஓசை திசையெங்கும் இடி இடிப்பது போலிருக்கிறதாம் இந்தக் கோப வெறியனுக்கு இப்போது.

இந்தக் கோபத் துடிப்பிலே இடது கண்ணும் இடது தோளும் துடிக்கின்றனவாம் தீ நிமித்தமாக. ஆனால் துர் நிமித்தம் கண்டு ராவணனா கலங்கப் போகிறவன் !

வாசுகி போல் ஆணவப் படமெடுத்துத் தன் துஷ்ட நாகக் கண்களால் ராமனை நோக்கியவன், இப்போது கிரகண காலத்திலே சூரியனை எதிர்க்கும் ராகுவைப் போலச் சீறுகின்றான் :



ஆக, ராகவனை
அவ்வழிக் கண்டான்,

மாக ராகம்நிறை
வாளொளி யோனை

ஏக ராசியினின்
எய்த எதிர்க்கும்

வேக ராகுவென,
வெம்பி வெகுண்டான்.

[ஆக — அவ்வாறு துர் நிமித்தம் தோன்ற. அவ்வழிக் கண்டான் – அப்போது கண்டவனான ராவணன். மாக ராகம் நிறை – ஆகாயத்திலே செந்நிறம் நிறைந்த. வாள் ஒளியோனை – மிக்க ஒளியையுடைய சூரியனை. ஏக ராசியினின் – சூரிய சந்திரர் ஒருங்கு சேரும் அமாவாசையில். எய்த எதிர்க்கும் – கிட்டப் போய் எதிர்க்கிற. வேக ராகுவென – வேகமுள்ள அந்தப் புராணப் பாம்பாகிய ராகுவைப் போல.]

இப்படி ஒன்றினொன்று உச்சமாக இசைச் சித்திரங்களை உருவாக்குவதும் கம்பனது சிறப்பியல்பு.

ராவணனது ஆணவம் நிறைந்த மாட்சியைக் கம்பனது சொற் சித்திரங்களில் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம்; ராவணனது கோபாவேச வருணனைகளையும் கண்டிருக்கிறோம்.

அங்க பங்க முற்ற சூர்ப்பணகை வரும்போது ராவணனது கொலு மாட்சியை முதன் முதல் கண்டோம். 'மூன்றுலகுடையவன்' கொலுவிருக்கிறான். 'மூன்றுலகுடையவன் தங்கை'யோ 'மூக்கிலள்' என்ற நிலையில் முகங்காட்டுகிறாள்.

அந்த நிலையில் ராவண கோபம் வந்துவிடுகிறது. அக் கோபம் நாலு பாடல்களில் வருணிக்கப்படுகிறது. அந்த ஆணவத்திற்கு அப்படி ஒரு மூக்கறுப்பு அதற்கு முன் ஏற்பட்டதில்லையே! அந்த நிலைக்குத் தக்கவாறு அந்தக் கோபாவேசம் ஜொலிக்கக் காண்கிறோம்.

பிறகு ராவண சித்திரமாக நாம் காண்பது சுந்தர காண்டத்திலேதான். ஆனால் இதற்கு முன்பே ஆரணிய காண்டத்தில் ராவண கோபத்தின் விசேஷ வருணனையைப் பார்க்கிறோம்.

ராவண மாட்சியைச் சீதை இகழ்ந்து பேசியதும் ராவண சந்யாசி, கோபம் கொள்ளும் கட்டம்தான் அது. 'வெகுளி பொங்க, விட்டது மாய வேடம்' என்ற அந்தக் கோபநிலைதான்.

சுந்தர காண்டத்திலே ராவணனுடைய மாட்சியைக் காட்டும் மூன்று சித்திரங்கள் குறிப்பிடத் தக்கன. இந்த மூன்று காட்சிகளையும் அனுமன் பார்க்கிறான்.

இலங்கையூரிலே சீதையைத் தேடிப் பார்க்கும்போது அரண்மனையில் படுத்திருக்கும் ராவணனைப் பார்க்கிறான் அனுமன். விரக தாபத்தால் வருந்தி அயர்ந்து கிடக்கும் நிலைதான்; எனினும் கம்பீர மாட்சி தோன்ற ராவணன் வருணிக்கப் படுகிறான்.

பிறகு அசோக வனத்தில் சீதையைச் சந்திக்க வந்த ராவணனை அனுமன் பார்க்கிறான். உலகத்தை யெல்லாம் அடைத்துக் கொண்டிருக்கும் ராவண மாட்சிக்கு இசைந்த இசைச் சித்திரம், நீளமான விருத்தங்களில் உருவாகிறது.

சப்த ஜாலங்கள் நம்மைப் பிரமிக்கச் செய்கின்றன. ப்ளேக் என்ற ஆங்கிலக் கவிஞனின் சப்த ஜாலங்களில் வேங்கைப் புலி தன் கொடிய அழகு தோன்ற வெளிப்படுவது போலச் சுந்தர காண்டத்தின் 'நிந்தனைப் படல'த்திலே ராவண காம்பீர்யமும் வெளிப்படுகிறது. இங்கும் ராவண கோபம் வருணிக்கப் படுகிறது.

அப்பால் ராவணனது கொலு மாட்சியை இந்திரஜித்தால் கட்டப்பட்ட அனுமன் கண்டு கொள்கிறான். நுட்ப வசீகரமான இசைச் சித்திரத்தை இங்கே காண்கிறோம். இங்கும் ராவண கோபம் வருணிக்கப்படுகிறது.

இதற்குப் பின் யுத்த காண்டத்திலே நாம் காணும் ராவண மாட்சியின் இசைச் சித்திரம்தான் கோபுரத்தின் தோரண மணி வாசல்மீது ராவணனைக் காட்டுவது. இந்த இசைச் சித்திரத்துடன் சுந்தர காண்டத்தில் வரும் மூன்று சித்திரங்களும் ஆரணிய காண்டத்தில் வரும் கொலுச் சித்திரமும் ஒப்பிட்டு ஆராயத் தக்கன.

ஆரணிய காண்டத்தின் கொலுச் சித்திரத்திலே சொற்கலை இந்தக் கவிமேதைக்கு முற்றும் கட்டுப்பட்டுப் பணி புரிவதாகத் தோன்றவில்லை. சுந்தர காண்டத்திலோ சொல்லும் பொருளும் 'நான் முன்னே, நீ முன்னே!' என்று போட்டி போட்டு இசைச் சித்திரங்களை உருவாக்கும் அதிசயத்தைக் காண்கிறோம்.

யுத்த காண்டத்திலோ இப்போது நாம் ஆராயும் இசைச் சித்திரத்திலே ராவண மாட்சி, ராவண கோபம் எல்லாம் சொல்லையும் பொருளையும் மீறிய இசை-வேகத்திலேயே உருப்பெற்று விடுகின்றன.

மெலிந்த தோள்கள் வீரவெறியில் பூரிப்பதும், ஆணவம் படமெடுத்துச் சீறுவதும், கொற்றவெண் குடை வெண் சாமரம் போன்ற ராஜ சின்னங்கள் தனக்கு மாட்சி தருவதற்கு மாறாக அந்தச் சின்னங்களுக்கே இவனது தோற்றமும் காம்பீர்யமும் பெருமை தருவதும் எவ்வளவு ஆச்சரியமாகக் கட்புலனாகின்றன!

இந்த மாட்சி மீதும் கொடிய ஆட்சி செலுத்தும் ஆசைப் பேய் படுத்தும் பாட்டையும் இசை வேகம் காட்டி விடுகிறது. தெய்வப் பெண்கள், நாக கன்னிகைகள் பூலோக மடந்தையர்-யார் வந்து கண்ணெதிரே நின்றாலென்ன! ஞானகியை மறைக்கிறார்களா, மறக்கச் செய்கிறார்களா! பேராசையை உயிராசையாக்கத் தானே உதவுகிறார்கள்!

நாரத வீணா கானம், வாத்திய கோஷங்கள், ஆயுதங்களின் 'ஜணஜண' ஆரவாரங்கள், இதயப் பூசலை மறைக்கின்றனவா, மறக்கச் செய்கின்றனவா! பேராசை தன் பாழ்த்த குரலெடுத்துப் பாடுகிற பாட்டே இதய கானமாகி ஹிம்ஸிப்பதும் கவிஞனது இசையோடு இசையாகி விடுகிறது.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

62. பேரருளும் பேரிருளும்

மகா கவி மில்ட்டன் இயற்றிய 'சுவர்க்க நீக்கம்' என்ற காவியத்திலே சாத்தான் எப்படிச் சித்திரிக்கப்படுகிறான் என்பதை அறிந்திருப்பவர்கள் கம்பனுடைய ராவண சித்திரத்தையும் தெளிவாகத் தெரிந்துகொள்ளக்கூடும்.

கம்பனுக்கு ராமன் கடவுளின் அவதாரம்; ராமனுடைய பகைவனான ராவணன் தர்ம விரோதி, சாதுக்களின் விரோதி.

'ஆரணத்து அமுதை, அம்மறை தேடும் காரணத்தை' என்று கம்பன் ராமனைக் குறிப்பிடுவது கவனிக்கத் தக்கது. ராவணனும் வேதங்களைக் கற்றவன் தான்.

வேத கீதஅமிழ்(து)
அள்ளி விழுங்க

என்று வருணிக்கப் படுகிறானல்லவா !

ஆனால் அந்த அமுதச் சுவையை உள்ளபடி அறிந்தவனில்லை, அனுபவித்தவனில்லை. வேதம் தேடும் காரணமாகிய மூலகாரணப் பரம்பொருளைக் குறித்தோ ராவணனைச் சூனியவாதி என்றே சொல்ல வேண்டும். நுண்ணறிவாளன்; ஆனால் இந்த அறிவுக்கும் ஒழுக்கத்திற்கும் சம்பந்தம் இல்லை. இந்த அறிவும் மெய்யறிவுமோ இருட்டும் வெளிச்சமும்தான்!

ஆணவமும் வசிகரமும்

ராவணன் சிவபக்தன் என்று வருணிக்கப்படுகிறான். ஆனால் ராவணனுக்குச் சிவன் பரம்பொருளல்ல. சிவநேசச் செல்வர்களைப் போல் தாழ்ந்து அடிபணிந்து சிவனருளுக்கு இலக்கானவனல்ல. ஆணவ கோபுரத்தின் மீது வானளாவ நின்று, 'அவன் பரமேச்வரன்; நான் லங்கேச்வரன்' என்று இறுமாந்திருப்பவன்.

இத்தகைய ஆணவம் ராவணனை அகில லோக பயங்கரனாக்குகிறது; 'மூவர்க்கும் தேவர்க்கும் யாவர்க்கும் நானே ஸர்வாதிகாரி' என்று எண்ணிச் செயல்கள் புரியச் செய்து விடுகிறது. இந்த ஆணவம் ராவண குணநிசயத்தின் அதிமுக்கிய அம்சமாகும்.

'ஆணவம் ராவணாகாரமாக இருக்கிறதே!' என்று பொருள்பட ஒரு தமிழ்க் கவி வருணிக்கிறார். இவர் கம்பனுடைய ராவண சித்திரத்தை மெய்சிலிர்த்து அனுபவித்திருக்க வேண்டும்.

இந்த ஆணவத்திலிருந்தே பேராசை பிறந்து திக்விஜயம் செய்கிறது. இதுவே காமமாகி உலக அன்னையின் அவதாரமாகிய சீதையையும் சிறைப்படுத்துகிறது.

இத்தகைய ஆணவத்தைக் கோபுர நிலை மீது ராவணன் நிற்கும் நிலையே புலப்படுத்துகிறது :

வெம்பு காலினை
விழுங்கிட மேனாள்
உம்பர் மீதில்நிமிர்
வாசுகி ஒத்தான்.

ராவண வெறியை ஊட்டி வளர்த்து ராமனுடைய தர்மாவேசத்திற்குக் குறையாத அதர்ம ஆவேசம் ஆக்குவதும் ஆணவம்தான். புய வலிமை, ஆயுத வலிமை, மன வலிமை, தவ வலிமை ஆகிய (ஆத்ம பலம் தெய்வ பலம் மட்டுமில்லாத) வலிமைகளுக்கெல்லாம் ஊட்டம் தருவதும் ஆணவம்தான்.

இந்த ஆணவ உணர்வும் வீர உணர்வும் ராவணனுக்கு ஒருவகை வசிகர சக்தியையும் தந்திருக்கின்றன. ராவணனை நேசிப்பதற்கும் கூசிப் பணிவதற்கும் இந்த வசிகர சக்தியும் காரணமாகும்.

இத்தகைய வசிகர சக்தியைக் கருத்திற் கொண்டே கவிஞன்,

தோர ணத்தின்மணி
வாயில் மிசைச்சூல்

நீர ணைத்தமுகி
லாமென நின்றான்

என்று, கோபுரநிலை மீது நின்ற அந்த ராவண சித்திரத்தைப் பூர்த்தி செய்கிறான்.

ஆனல் இந்த வசிகரம் வேறு;

கமலத்தின் காடு
பூத்த காளமா
மேகம் ஒத்தான்

என்று காட்டிய அந்த வசிகரம் வேறு.

'காதலித்த உருவாகி அறம் வளர்க்கும் கண்ணாளன்' ராமன். அதற்கு எதிர்த்தட்டிலே மறம் வளர்க்கும் வலிமையாளன் ராவணன்.

ராவணனை வென்ற கார்த்தவீரியனாலும் வாலியாலும் கூட இவனை மூவுலகின் ஏகாதிபதி என்ற அந்தப் பதவியிலிருந்து அசைக்க முடியவில்லை. அத்தகைய வசிகர சக்தி ராவண சக்திக்கு உண்டு என்று ஊகிக்கலாம்.

வால்மீகத்திலேயே ராவணனை ஆணவமும் உக்கிர சக்தியும் அதிகார மாட்சியும் உள்ளவனாகக் காண்கிறோம். இவன் இட்டது சட்டம் என்ற நிலையையும் காண்கிறோம். அந்த ராவண குணாதிசயம் கம்பராமாயணத்திலே மேலும் வளர்ந்து தனக்குரிய பூர்ண ஆகிருதியை அடைந்திருக்கிற தென்று சொல்ல வேண்டும்.

ராம குணாதிசயம் தெய்வ நிலையில் விசேஷ வளர்ச்சி பெற்று விட்டதல்லவா கம்பன் காலத்திலே? ராவண குணாதிசயமும் அதற்கு எதிரான உச்ச நிலையில் தன் காவியத்திலே வளர்ச்சி பெற வேண்டுமென்று கருதியது கம்பனுள்ளம்.

இந்த மன நிலைக் கிணங்க ராவண கௌரவத்தை அதி ஜாக்கிரதையாகப்



பாதுகாக்கிறது கவித் திறன். அறம் வளர்க்கும் ராம வீரத்தை எவ்வளவு ஜாக்கிரதையாகச் சித்திரிக்கிறதோ, அவ்வளவு ஜாக்கிரதையாக மறம் வளர்க்கும் ராவண வீரத்தையும் சித்திரித்துக் காட்டுகிறது கம்பன் மேதை.

இந்த வீரம் 'வழியவா வழி' மேல் சென்று வெற்றி பெற்றது; எப்படியாவது வெற்றி பெறுவதையே லட்சியமாகக் கொண்டிருந்தது. மண்ணெல்லாம் வென்ற ஆதிக்க வெறி விண்ணிலும் படர்ந்து ஏறி இந்திர சம்பத்தையும் கொள்ளை கொண்டது என்பதும்,'மன்னுயிர் புடைத்து'த் தின்று சாதுக்களை ஹிம்ஸித்தது என்பதும் ராவண பராக்கிரம வரலாறு.

இந்த ஆணவம் நிறைந்த பராக்கிரமத்தின் சிகரமாக அமைகின்றது சீதையைச் சிறை வைத்த செயல், கம்ப ராமாயணத்திலே.

சீதை மீது ராவணன் கொண்ட காமத்தை வித்தாகக் கொண்டே ராமாயண கதை வளர்கிறது என்பது பிரசித்தம். கோபுர நிலைமீது தான் காட்டுகிற ராவண சித்திரத்திலும் இந்தக் காமத்தைக் கம்பன் மூன்று தடவை நினைவூட்டுகிறான்.

எடுத்த எடுப்பிலேயே, காம வெறியால் மெலிந்த தோள்கள் போர் வெறியால் பூரித்தன என்கிறான். ஆனால் விரைவில் ஜானகியின் அழகை நினைவூட்டி விடுகிறார்கள் ஊர்வசி முதலானவர்கள். நூல்களை ஓதும் சாஸ்திரிகளும் 'சீதை சீதை' என்ற நாமஜபத்தை மூட்டி விடுகிறார்கள் உள்ளத்திற்குள்ளே.

இத் தகைய காம வெறியையும் ஆணவப் பேராசை வெறியின் கொம்பிலே கனிகின்ற விஷக் கனியாகக் காட்டுகிறது கம்பன் கவித்திறன். சீதா பிராட்டியின் தூய பேரழகிற்கு முன் அந்தக் காம வெறியும் வரம்பு மீறித் தன்னை வெளியிட்டுக் கொள்ளத் துணியவில்லை யென்றும் காட்டுகிறது கம்பன் மேதை.

எனினும் ராவணனது காமத்தின் வேகத்திற்குக் குறைவில்லை. உற்றார் உறவினர்கள் அனுமனால் கொல்லப்பட்ட பின்பும், தன் மகனை அட்சகுமாரனே கொல்லப்பட்ட பின்பும், அத்தகைய சோகத்திலும் மோகம் தணிந்துவிடவில்லை. தன் குலப் பெருமைக்கு ஏற்பட்ட அந்த மூக்கறுப்பையும் மறந்து, எதிரியின் ஒப்பற்ற வீரத்தையும் மறந்து விடுகிறது காமம்.

இத்தகைய காமமும் ராவணனுடைய ஆணவத்தையோ, வீரம் நிறைந்தமான உணர்ச்சியையோ போக்கிவிடவில்லை. மில்ட்டனுடைய சாத்தானின் பெருமை யுணர்ச்சிக்கும் சங்கற்ப சக்திக்கும் தான் ராவணனுடைய மன உறுதியையும் ஆணவத்தையும் ஒப்பிட முடியும் என்பர் விமர்சனப் பேரறிஞர் வ. வே. சு. ஐயர். இத்தகைய குணாதிசயத்திற்கு உரிய வசீகர சக்தியும் உண்டல்லவா!

இலங்கையின் உயிர்நிலை யாகவும் ராமனது வானர சேனைக்குக் கூற்றமாகவும் காணப்பட்ட இந்திரஜித்தும் ராவணனது வீரமும் ஆணவமும் நிறைந்த தோற்றப் பொலிவினால் பெரிதும் வசீகரிக்கப்படுகிறான். அரக்கர்களெல்லாம் ராவணனுக்காக உயிர்த் தியாகம் செய்ய 'நான் முன்னே, நீ முன்னே' என்று முற்படுகிறார்களே, அதற்கும் ராவணனுடைய சங்கற்ப சக்தியும் ஆணவம் நிறைந்த தோற்றப் பொலிவும் முக்கிய காரணம் என்று சொல்லலாம்.

ராவணனும் ராமனும்

இந்த ஆணவ வசீகரத்தை வருணித்துவிட்டு இதற்கு எதிரான ராம சௌந்தரியத்தின் வசீகரத்தையும் அதே பாட்டில் வருணித்துக் காட்டும் கவிஞன், ராவண கோபத்தை இரண்டு பாடல்களில் வருணிக்கிறான். ராமனது தெய்விக சௌந்தரியத்தால் ராவணன் வசீகரிக்கப்படவில்லை யென்பதைத் தான் இந்தக் கோபம் வெளிப்படையாகக் காட்டுகிறது.

எனினும் ராமனது திருமேனி ராவணனை வசீகரிக்கவே யில்லை என்று சொல்ல முடியுமா! அந்த மேனியைப் பார்த்தே ராவணன் ராமனை அறிந்து கொள்கிறானே!

எனவே சாரணனை நோக்கி, 'ராமனை நீ அறிமுகப்படுத்தாமலே நான் தெரிந்து கொண்டுவிட்டேன். பிறரை நீ அறிமுகப்படுத்துவாய்' எனக் கட்டளையிடுகிறான்:

ஏனை யோன்இவன்
  இராமன் எனத்தன்
மேனி யேஉரைக்
  கின்றது; வே(று)இச்
சேனை வீரர்
  படையைத் தெரியென்று

தான்வி னுவ, எதிர்
சாரன் விளம்பும்.

[ஏனையோன் இவன் – யாவரினும் வேறுபட்டுத் தோன்றும் இவன். சேனை வீரர் படையை – படையோடு கூடிய சேனை வீரரை. தெரி – தெரிவிப்பாய். எதிர் சாரன் விளம்பும் – சாரணன் மறுமொழி கூறலானான்.]

ராமனது திருமேனியின் தெய்வ சோபையை ராவணாகாரமான ஆணவமே எதிர்த்து நின்ற போதிலும், அந்த உள்ளத்தினுள்ளும் அந்தத் திவ்ய சௌந்தரியத்தின் அதி சூட்சுமமான வசீகர சக்தி உணரப்பட்டது என்பது குறிப்பு. அதனால் தான் ராவணன், 'இவன் ராமன் என்பதை அந்த மேனியே உரைக்கின்றது' என்கிறான்.

இத்தகைய வசீகர சக்தி ஆணவத்தோடு முற்றும் முரண்பட்ட, கருணை நிறைந்த, சங்கற்ப சக்தியிலிருந்து தோன்றுகிறது. தியாகத்தில் வேரூன்றி வளரும் தெய்வ சக்தி இது.

இதை ஒருவாறு சுட்டிக் காட்டுவது பின்வரும் பாரதி வாக்கு :

> நானெனும் ஆணவம்
> தள்ளலும் – இந்த
> ஞாலத்தைத் தானெனக்
> கொள்ளலும் – பர
> மோன நிலையில்
> நடத்தலும் – ஒரு
> மூவகைக் காலம்
> கடத்தலும் – நடு
> வான கருமங்கள்
> செய்தலும் – உயிர்
> யாவிற்கும் நல்லருள்
> பெய்தலும் – பிறர்
> ஊனைச் சிதைத்திடும்
> போதிலும் – தன(து)
> உள்ளம் – அருளில்
> நெகுதலும்...

இத்தகைய குணாதிசயம் ராமனுக்குத் தெய்விக சக்தியை அளிப்பதுடன் இவனை மானுடத்தின் வெற்றியாகவும் காட்டுகிறது. குண சௌந்தரியம் இங்கே ரூப சௌந்தரியத்தை மேம்படுத்துகிறது. இந்த இருவகைச் சௌந்தரிய வசீகரம், ராமனை 'அறம் வளர்க்கும் கண்ணாள' னாக்கி விடுகிறது.

'அறம் வளர்க்கும் கண்ணாளன்' சீதையின் கண்ணாளனாகிறான். இவனை மிதிலைப் பெண்களெல்லாம்,

தோள் கண்டார்
தோளே கண்டார் !

என்ற நிலையில் காதலிக்கிறார்கள்.

அவரவர் காதலுக்கு உரிய சொரூபமே ராமன்பால் காணப்பட்டதாம்.

காதலித்த உருவாகி
அறம்வளர்க்கும் கண்ணாளன்

தானே ராமன் என்ற லட்சிய வீரன்! உள்ளம் கவர் கள்வனான பரமாத்மாவின் வசீகர அழகையே மிதிலைப் பெண்கள் கண்டனர் என்பது குறிப்பு.

'இந்த அழகைக் கண்டால் ஆடவரும் பெண்மை வேண்டுமென்று ஆசைப் படுவர் !' என்பது விசுவாமித்திரனின் அபிப்பிராயம், அனுபவம்.

இந்த அழகின் உயிர்நிலையே அருள் தான் :

செந்தாமரைத்தடங்கண்
செவ்வி அருள்நோக்கம்.

என்றல்லவா ராமனது வசீகர அழகைக் குறிப்பிடுகிறார்கள் அயோத்தி வாசிகளான பெண்கள்!

இந்த வசீகரசக்தி சொந்தச் சகோதரர்களை ஆட்கொள்வது போல் வேடனான குகனையும் ஆட்கொள்ளுகிறது; வானரனான சுக்கிரீவனையும் ஆட்கொள்ளுகிறது; ராவண சகோதரனையும் சொந்தச் சகோதரனாக்கிக் கொள்கிறது.

எனினும் ராவணனை ஆட்கொள்ளவில்லை; ஆட்கொள்ள முடியவில்லை. 'நான் தானே ராமன்; தெரியவில்லையா !' என்று ராவணனுக்கும் அருள் காட்டி வசீகரிக்க முயன்றும், பயன் இல்லை !

தன் அந்தராத்மா உணர்ந்து கொண்டதையும் ராவண ஆணவம் உதறித் தள்ளி விடுகிறது. 'நானெனும் ஆணவம்' தள்ளிய தியாக சக்தியை, தர்ம சக்தியை, ராவணன் என்ற ஆணவ லட்சியம் எப்படி உணர்ந்து கொள்ள முடியும்? கடவுளைச் சாத்தான் அறிந்து கொள்வதுண்டோ ?

ராமன் என்றால் மகிழ்பவன், மகிழ்விப்பவன்; தர்மத்தால் உலகை மகிழ்விப்பவன். ராவணன் என்றால் உலகத்தை அழச் செய்பவன்; அழுபவன், அதர்மத்தின் லட்சியம்.

ராவணனையும் மன்னித்து வழிப்படுத்தச் சித்தமாயிருக்கிறது ராமனது பேரருள். ஆனால் பேரிருளுக்குப் புரிந்துவிடுமா பேரருள்? பேரருளுக்குத் தான் பணிந்து விடுமா பேரிருள்?

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

63. சிரித்த சிங்கம் திகைக்கிறது

'இதோ இவன் லட்சுமணன்! அவன் பக்கத்தில் சுக்கிரீவன்; அவனுக்குப் பக்கத்தில் அங்கதன்' என்றெல்லாம் சாரணன் காட்டப் போகிறான். 'அதோ நடந்து கொண்டிருப்பவன் அனுமன்; இதோ நிற்பவன் நீலன்' என்றெல்லாம் சொல்லப் போகிறான். நளன், ஜாம்பவான், குமுதன் முதலானவர்களையும் அறிமுகப் படுத்தப் போகிறான்.

ராவணனையும் பிரமிக்கச் செய்ய வேண்டும் என்ற நினைப்புடன் சாரணன் ராமனுடைய வீரர்களை வாயார வருணிக்கிறான்; வானளாவப் புகழ்ந்து பேசுகிறான். ஆனால் ராவணனா இந்த வாக்குப் பிரவாகத்திலே மயங்கி விடப் போகிறவன்!

ராமனைத் தனக்கு அறிமுகப்படுத்தத் தேவையில்லையென்று ராவணனே சொல்லி விட்டான். லட்சுமணன் முதலான மற்றையோரை இன்னாரென்று தெரிவிக்குமாறு கட்டளையிட்டான்.

'தங்கையையும் உறக்கத்தையும் கோபித்தவன்'

சாரணனோ லட்சுமணனைப் பெயர் சொல்லாமல் செயலைக் கொண்டே அறிமுகப்படுத்த விரும்புகிறான். ராமன் தம்பி என்று கூடத் தெரிவிக்காமல் அவனை விடாது பணி செய்யும் அந்தச் செயலையும் குறிப்பிடுகிறான்.

பதினான்கு கவிகளில் ராமன் படையிலுள்ள முக்கியமான வீரர்களைத் தெரிவிக்கும் சாரணன், இரண்டு பாடல்களை லட்சுமணனுக்கு உரிமையாக்குகிறான்.

நெஞ்சை நோக்கி வந்த வேல் அதைக் கிழித்துக் கொண்டு உட்புகுவது போல் சாரணன் வார்த்தை செவி வழியாகச் செல்லுகிறது:

இங்கிவன், படை
  இலங்கையர் மன்னன்
தங்கை என்றலும்
  முதிர்ந்த சலத்தால்
அங்கை வாள்கொ(டு)
  அவள்ஆகம் விளங்கும்
கொங்கை நாசிசெவி
  கொய்து குறைத்தான்.

[சலத்தால் – கோபத்தினால். அங்கை வாள்கொடு – அகங்கையிலுள்ள வாளைக் கொண்டு. ஆகம் – மார்பு.]

பிரதாப லங்கேச்வரனுடைய தங்கை என்றால் எவருக்கும் வணங்கத் தானே தோன்றும்! ஆனால் இந்த மனிதனோ கோப வெறிகொண்டு அங்க பங்கம் செய்து விட்டானாம்.

'லங்கேச்வரன் தங்கை' என்று அவளை யாரோ அறிமுகப் படுத்தியது போலவும், அந்த அறிமுக வுரையே அந்தக் கோபக்காரனுடைய இரத்த வெறியைத் தூண்டி விட்டது போலவும் சாரணன் சொல்லுகிறான்.

இனி, ராமனுக்கு உறங்காப் பணி செய்பவன் லட்சுமணன் என்பதை வற்புறுத்துகிறான். தன்னைத் தம்பியென்று லட்சுமணன் நினைத்துப் பார்க்கவும் இல்லையே; பணியாளன் என்று தானே எண்ணிக் கொண்டிருக்கிறான்!

அத்தகைய கைங்கரிய மனப்பான்மையை இந்தச் சாரணன் உணர்ந்து கொண்டிருக்கிறானென்றால், இவன் எவ்வளவு சாமர்த்தியமாக ஒற்றுச் செய்தி அறிந்து வந்திருக்கிறான், பாருங்கள்!

சூர்ப்பணகையைக் கோபித்துத் துரத்தியவன், உறக்கத்தையும் கோபித்து ஓட்டி விட்டானாம்:



அறக்கண் அல்லதொரு
கண்ணில னாகி

நிறக்க ருங்கட லுள்
நேமியி னின்று

துறக்கம் எய்தி
யவரும் துறவாத

உறக்கம் என்பதனை
ஓட முனிந்தான்!

[அறக் கண்–தருமம் என்ற கண். நிறக் கருங்கடலுள் நேமியினின்று–கருநிறக் கடலுக்கு உட்பட்டிருக்கும் இந்தப் பூமியிலிருந்தும். துறக்கம் எய்தியவரும் – இவ்வுலகத்தைத் துறந்து அடைய வேண்டிய மேலுலகத்தை அடைந்தவர்களும். முனிந்தான்– கோபித்தவனானான்.]

'இதோ ராமன் பக்கத்தில் இருக்கிறானே, இவன் வெகு கோபக்காரன்' என்கிறான். 'உறக்கத்தையும் கோபித்து ஓடச் செய்தவன்' என்கிறான். 'உன் பேரைக் கேட்டதும் வந்த கோபம்தான், உன் அருமைத் தங்கையின் அங்கபங்கத்திற்குக் காரணமாயிற்று!' என்கிறான்.

தம்பியும் தம்பியும்

லெட்சுமணன் தன் கையால் சுக்கிரீவன் கையைப் பிடித்துக் கொண்டிருக்கிறான். 'அந்தக் கோபக்காரன் தன் கையால் பிடித்துக் கொண்டிருக்கிறானே, அவன்தான் வாலியோடு துணிந்து போர் செய்த சுக்கிரீவன்' என்கிறான் :

கைஅ வன்தொட
அமைந்த கரத்தான்,

ஐய! வாலியோ(டு) இவ்
அண்டம் நடுங்கச்

செய்தவன் செருவி
னில்திகழ் கின்றான்,

வெய்ய வன்புதல்வன்
யாரினும் வெய்யான்.

[ஐய – ஐயனே. வன் செருவினில் – கொடிய போரில். திகழ்கின்றவனாகி – விளங்குகின்றவனாகி. வெய்யவன் புதல்வன் – சூரிய குமாரனான சுக்கிரீவன். வெய்யான் – கொடியவன்.]

லட்சுமணனையும் சுக்கிரீவனையும் குறித்து, தம்பியும் தம்பியும் கைகோத்துத் திரிவதாகக் கூறுகிறான் சாரணன். சுக்கிரீவன் ராமனால் தம்பியாகக் கொள்ளப்பட்டவனல்லவா!

இவ்வளவு தூரம் எதிரிகளின் இரகசியம் தெரிந்து பேசுகிற சாரணன், வாலியை நினைவூட்டி ராவணனுக்குச் சூடு கொடுப்பது போலவும் பேசுகிறான். 'அந்தப் போரில் திகழ்கின்றான்' என்று கூறுவது ராவணனை இகழ்வது போலத்தானே!

சுக்கிரீவன் பக்கத்தி லிருக்கும் அங்கதனை, 'அவன் தானையா வாலி பிள்ளை!' என்று சொன்னாலே போது மல்லவா! அப்படியே அவனை அறிமுகப்படுத்தி விட்டு அனுமனைக் 'கடல் கடந்தவன்' என்று நினைவூட்டுகிறான்.

கடந்த வன்சரிதை
கண்டனை அன்றே!

என்பதில் தான் எவ்வளவு கிண்டல்?

'அதோ நிற்பவன் நீலன்; காலன் என்றே கூறுவார்கள், சூலமும் பாசக் கயிறும் இல்லை என்று தெரிந்தும் கூட!' என்கிறான்.

வேறொருவன் வேறாகச் சற்று விலகி நிற்கிறான். அவன் தான் சேதுவைக் கட்டி முடித்த வானரத் தச்சனான நளன் என்கிறான்.

எவ்வளவு விரைவாகக் கட்டி முடித்தான் என்பதை ராவணனும் வியக்குமாறு வெளியிட விரும்புகிறான் சாரணன்:

வேறாக நின்றான்
நளன் என்னும் விலங்கல்
அன்னான்;
ஏறு வருணன்
வழிதந்திலன் என்(று)இ
ராமன்
சீறாத உள்ளத்(து)
எழுசீற்றம் உகுத்த
செந்தீ
ஆறாத முன்னம்
அகன் வேலையை ஆறு
செய்தான்.

[விலங்கல் அன்னான் – மலையை ஒத்தவன். ஏறு – கர்வம் ஏறினவனாய், எழுசீற்றம் – எழுகின்ற கோபமும். உகுத்த செந்தீ – வெளிப்படுத்திய செந்நிறத் தீ. அகன் வேலையை – பரந்த கடலிலே. ஆறு செய்தான்-வழி உண்டாக்கியவன்.]

ராமனுடைய பண்பட்ட உள்ளத்தைச் 'சீறாத உள்ளம்' என்கிறான். இந்த உள்ளத்திலே தண்ணீரில் எழுந்த தீயைப் போல எழுந்ததாம் சீற்றம். அந்தத் தீ ஆறுவதற்கு முன்பே அணை கட்டி முடித்து விட்டானாம் நளன்.

'சுடு தீ அன்ன — சேவகன் சீறு முன்னம் சேதுவும் இயன்ற மாதோ!' என்று சுந்தர காண்டத்தில் 'கடல் தாவு படல'த்தில் வருவதையும் ஒப்பிட்டு நோக்கலாம்.

பிறகு கரடிக்கு அரசாகிய ஜாம்பவானைச் சிறந்த அனுபவ அறிஞன் என்கிறான் சாரணன்.

'அதோ தூரத்தில் தெரிகிறானே அவன் தான் குமுதன்; அதோ நிற்பவன் குமுதாட்சன்' என்கிறான்.

இவன்காண் கவயன்,
கவயாக்கனும் ஈங்கி
வன்காண்

என்று இரண்டு வானர வீரர்களைச் சுட்டிக் காட்டுகிறான்.

அஞ்சனா தேவியின் கணவனான கேசரி என்ற வானர வீரனைச் சாரணன்,

'சிவன்காண்; அயன்காண்!'
எனும்தூதனைப் பெற்ற
செல்வன்,
அவன்காண் நெடுங்கேசரி
என்பவன், ஆற்றல்
மிக்கான்

என்று அறிமுகப் படுத்துகிறான்.

இப்படியே முரபன், சரபன், சதவலி, பனசன், இடபன் என்றெல்லாம் சிலரை அறிமுகப்படுத்துகிறான். சுக்கிரீவனுக்கு இடப் பக்கத்தே நின்ற வீரனைத் 'ததிமுகன்' என்று அறிமுகப்படுத்தி விட்டு, 'அதோ (கவனித்துப் பார்த்தால்) புலப்படுகிறானே அவன் தான் சங்கன் என்ற சிங்கம்' என்கிறான்.

கடைசியாகச் சாரணன் வானரச் சேனை வீரரைக் காட்டி முடிக்கிறான்:

அண்ணல்! கேள்; இவர்க்(கு)
உவமையும் அளவும் ஒன்(று)
உளதோ?
விண்ணின் மீனினைக்
குணிப்பினும், வேலையுள்
மீனை
எண்ணி நோக்கினும்
இக்கடல் மணலினை
யெல்லாம்



கண்ணி நோக்கினும்
கணக்கில என்றனன்
காட்டி.

[விண்ணின் மீனினை—ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களை. குணிப்பினும் – எண்ணிப் பார்த்தாலும். வேலையுள் மீனை – கடலிலுள்ள மீன்களை. கண்ணி நோக்கினும் – ஆராய்ந்து பார்த்தாலும். கணக்கில – வானரர்களைக் கணக்கிட முடியாது.]

இப்படி ராம சேனைக்குக் கணக்கில்லை; அந்த வீர சமுத்திரத்திற்கும் வரம்பில்லை என்று கூறிமுடித்தான் சாரணன். அது கேட்ட ராவணனது உள்ளத்தில் கோபம் பொங்கியதென்று சொல்லவாவேண்டும்!

நகைப்பும் திகைப்பும்

ராவணன் திறன் என்றால் சாமானியமா? இந்தப் பெருந்திறல்–அரக்கனுக்கு வந்தது பெருங் கோபம்; ஆனால் அந்தச் சினம் சிறுநகையாகவே வெளிப்படுகிறதாம்:

சினங்கொள் திண்டிறல்
அரக்கனும் சிறுநகை
செய்தான்!

[திண்டிறல் – மிக்க வலிமை.]

மான்கள் காட்டிலே கூட்டங் கூட்டமாக் காணப்படலாம். மிருகேந்திரனாகிய ஒரு சிங்கத்தை அவை என்ன செய்ய முடியும்!

இலங்கையின் வடதிசை வாசலின் கோபுரத்தின் மீது ஏறி நிற்கின்ற ராவணனுக்கு ராமனுடைய சேனை வீரர்களை இன்னின்னார் என்று தெரிவித்த சாரணன், அந்தத் தலைவர்களின் வீரத்தையும் வலிமையையும் அச்சேனையின் வரம்பின்மை முதலியவற்றையும் சொல்லி முடித்தான். அப்போது ராவணன் நிலை இது:

சினங்கொள் திண்டிறல்
அரக்கனும் சிறுநகை
செய்தான்,
'புனங்கொள் புன்றலைக்
குரங்கினைப் புகழுதி
போலாம்;
வனங்க ளும்படர்
வரைதொறும் திரிதரு
மானின்
இனங்க ளும்பல,
என்செயும் அரியினை?'
என்றான்.

[புனங்கொள் – கொல்லையில் திரிகிற. புன்றலை – இழிவான தலையையுடைய. குரங்கினை – குரங்குகளை. புகழுதி போலும் – புகழ்வாய் போலும். படர் வரை தொறும் – படர்ந்துள்ள மலைகள் தோறும். திரிதரு மானின் இனங்களும்– திரிகின்ற மான் கூட்டங்களும். என் செயும் – என்ன செய்யும். அரியினை – சிங்கத்தை.]

இந்தச் சிங்கத்திற்கு ஏன் இந்தத் திகைப்பு! இடி விழுகிறது. மயில் — கூட்டம் நிலைகுலைந்து ஓடுகிறது.

ராவணனைச் சூழ்ந்திருந்த தெய்வ மங்கையர் யாவரும் ஓடிப் போகிறார்கள். பிறரும் குழப்பம் அடைகிறார்கள். ஏன்!

நிலைமையைப் புரிந்து கொள்வதற்கு ராவணனுக்கே கொஞ்ச நேரம் பிடிக்கிறது. ஆனால் அதற்கு முன்பே எவ்வளவு காரியம் நடந்து விடுகிறது!

* * *

சாரணன் வருணித்துக் கொண்டிருந்த அந்த வானரங்களில் ஒன்று, இருந்த இடத்தில் சும்மா இருக்க முடியாமல், கிளம்பி விடுகிறதாம்.

வானரம் கிளம்பியதும், வான வீதியில் பாய்ந்து வந்ததும், ராவணனுடைய இருபது கண்களையும் ஏமாற்றி விடுகின்றன, அவ்வளவு படுவேகத்தில் அந்தக் காரியம் நடந்து விடுகிறது.

ராவணனுடைய சிறுநகையும் பெருஞ் சினமும், நடந்ததைப் புரிந்து கொள்ளாமலே, திகைப்பாக மாறுகின்றன.

'குரங்கைப் புகழ்கிறாயே! கொல்லையில் திரிந்து சேட்டைகள் செய்யும் குரங்கினம் தானே!' என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே, குரங்கு சுவெல மலையிலிருந்து கிளம்பி வானத்தில் பாய்ந்து விட்டது!

'சிங்கத்தை என்ன செய்ய முடியும்!' என்று கேட்டு முடிப்பதற்குள்ளேயே, 'இது செய்ய முடியுமே!' என்று வந்து குதித்து விடுகிறது குரங்கு!

சிங்கத்திற்குத் தான் அச்சம் என்பது தெரியாதே! சிரிப்பு மாறித் திகைப்பாகிறது.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

64. குத்துச் சண்டை

சிங்கத்தின் திகைப்பிற்குக் காரணம் குரங்கு பாய்ந்தது தான். ராவணனும் சாரணனும் உரையாடிக் கொண்டிருக்கும்போது, விபீஷணன் அரக்கரை இன்னார் இன்னார் என்று ராமனுக்குக் காட்ட விரும்பி, முதன் முதல் ராவணனைக் காட்டினான்.

'அதோ அந்தக் கோபுரக் குன்றத்தில் ஏறிநிற்பவன் புன்தொழில் இராவணன்':

'கூறு மங்கையர்
குழாத்திடைக் கோபுரக்
குன்றத்(து)

ஏறி நின்றவன்
புன்தொழில் இராவணன்'
என்றான்.

[கூறு மங்கையர் – சிறப்பித்துச் சொல்லப்படுகிற தேவமங்கையர். குழாத்திடை-கூட்டத்தின் நடுவே. கோபுரக் குன்றத்து - குன்று போலிருக்கும் கோபுரத்திலே.]

பாய்ந்தானே சுக்கிரீவன்

ராமனுடைய விருப்பத்திற்கு இணங்க வேறு அரக்கர்களையும் தெரிவிக்க விரும்பினான் விபீஷணன். ஆனால் சுக்கிரீவனால் பொறுத்துக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை.

விழிகள் கனல்கக்க, ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து விடுகிறான் :

கருதி மற்றொன்று
கழறுதல் முனம், விழி
கனல்கள்

பொருது புக்கன
முந்துறச், சூரியன்
புதல்வன்,

சுருதி அன்னவன்
சிவந்தநற் கனியென்று
சொல்லப்

பருதி மேல்பண்டு
பாய்ந்தவ னுமெனப்
பாய்ந்தான்.

[கருதி – விபீஷணன் எண்ணி. மற்றொன்று கழறுதல் முனம் - வேறொன்று சொல்வதற்கு முன்னே. விழிக் கனல்கள் பொருது புக்கன முந்துற - விழிகளிலே கனற்பொறிகள் போட்டி போட்டு முற்பட்டுப் புறப்பட்டனவாக. சூரியன் புதல்வன்-சூரிய புத்திரனான சுக்கிரீவன். சுருதியன்னவன் – வேதத்தை ஒத்தவனாகிய அனுமன். பருதிமேல் – சூரியன் மேல். பண்டு – முன்னாளில்.]

ராவணனைத் தெரிவித்தபின் வேறு யாரை அடுத்தபடியாகச் சொல்லலாம் என்று விபீஷணன் மனத்தில் எண்ணி வாய் திறப்பதற்கு முன்பே சுக்கிரீவன் பாய்ந்து விடுகிறான்.

எப்படி ! உதய சூரியனைக் கனியென்று பறித்துச் சாப்பிட்டு விடுவோமென்று அன்று பாய்ந்த அனுமனைப் போல் பாய்ந்து விடுகிறானாம்.

சுவேலமலை என்ற குன்றிலிருந்து ராவணக் குன்றிடம் பாய்கிறான் !

சுடரையத்(து) ஓங்கிய
சுவேலத்தின் உச்சியைத்
துறந்து,

சிதையத் திண்திறல்
இராவணக் குன்றிடைச்
சென்றான்.

[சுடரையத்து ஓங்கிய-நட்சத்திரங்களை நோக்கி ஓங்கிய. சிதையத் திண்திறல் – அவனுடைய மிக்க திறமை சிதையும்படி.]

உதயகிரியிலிருந்து சூரியனே அந்தக் கோபுரக் குனறத்தில் பாய்கிறானே! இப்படி ஒரு கணம் தோன்றுகிறதாம், விழிக் கனல்கள் சிந்த வெள்ளை வானரமாகிய சுக்கிரீவன் குதூகல தேஜசுடன் பாயும் போது:

தழையச் செங்கரம்
  பரப்பிய தன்பெருந்
    தாதை
உதயக் குன்றின்(று)
  ஒருகுன்றினில் பாய்ந்தவன்
    ஒத்தான்.

[தழைய—நெருங்க. செங்கரம்—செந்நிறக் கிரணங்கள். தன் பெருந்தாதை—தன் பெருமை பெற்ற தந்தையாகிய சூரியன்.]

பள்ளத்திலே பாயும் நீர்போலப் பாய்ந்து செல்கிறானும். இலங்கை அமைந்திருக்கிறதே திரிகூட மலைமீது, அந்த அழகிய மலை சலித்துத் தாழும்படி பாய்ந்து ராவணன் இருந்த கோபுரத்தை அடைகிறான்.

இந்தப் பாய்ச்சலுக்கு அனுமன், சூரியன் ஆகியோரின் பாய்ச்சலை ஒப்பிடுவது போல், ஜடாயு ராவணன் மேல் பாய்ந்து சென்ற அந்தப் பாய்ச்சலையும் ஒப்பிடுகிறான் கவி:

பள்ளம் போய்ப்புகும்
  புனலெனப், படியிடைப்
    படிந்து
தள்ளும் பொற்கிரி
  சலிப்புறக், கோபுரம்
    சார்ந்தான்,
வெள்ளம் போல்கண்ணி
  அழுதலும், இராவணன்
    தன்மேல்
உள்ளம் போல்செலும்
  கழுகினுக்(கு) அரசனும்
    ஒத்தான்.



[புனல்-நீர். படியிடை-பூமியிலே. தள்ளும் பொற்கிரி - தாழ்ந்த திரிகூடமலை. வெள்ளம் போல் கண்ணி - வெள்ளம் போல் பெருகிய கண்ணீரைக் கொண்ட கண்களையுடைய சீதை. உள்ளம் போல் செலும்-தன் மனம் போல் வேகமாகச் சென்ற.]

சுக்கிரீவன் பாய்ந்து விழுந்தது, ஏதோ இடி விழுந்த மாதிரி அந்தக் கோபுர நிலையில் ராவணனைச் சூழ்ந்திருந்த தேவ மங்கையரைக் கலக்கி விடுகிறது:

கரிய கொண்டலைக்
  கருணையங் கடலினைக்
    காணப்
பெரிய கண்கள்பெற்(று)
  உவக்கின்ற அரம்பையர்
    பிறரும்,
உரிய குன்றிடை
  உரும்இடி விழ்தலும்
    உலைவுற்று
இரியல் போயின
  மயில்-பெருங் குலமென
    இரிந்தார்.

[கொண்டலை - மேகம் போன்றவனை. உரும் இடி - பெரிய இடி. இரியல் போயின மயில் பெருங்குலம் என - நிலைகெட்டு ஓடுகிற பெரிய மயில் - கூட்டம் போல. இரிந்தார்-நிலைகெட்டு ஓடினார்கள்.]

மேகம் கண்ட மயில்களைப் போல் ஆனந்தமாக ராமனைக் கண்டு குதூகலம் அடைந்திருந்தார்களாம் ராவணனைச் சூழ்ந்திருந்த தேவமாதர்கள். இடி விழுந்த குறிலிருந்து மயில்-கூட்டம் சிதறி ஓடுவது போல் கூந்தல் குலைய, ஆடையாபரணங்கள் குலைய, இம் மங்கையரும் பிறரும் ஓடுகிறார்களாம்.

வந்து நிற்கிறான்

தேவரம்பைகளும் பிறரும் நிலைகெட்டு ஓடச் சுக்கிரீவன் ராவணன் முன்னே போய் நிற்கிறான். நீல மலை போல், ஆலகால விஷம் போல் இருக்கிறானும் ராவணன்.

அந்த விஷத்தைப் பட்சிக்கப் போகிற சிவபெருமானைப் போலத் தோன்றுகிறானும் சுக்கிரீவன். சிவபெருமான் தன் கயிலை மலையோடு வந்துவிட்டது போல் வந்து நிற்கிறானும்:

காலஇருள் சிந்துகதி
  ரோன்மதலை கண்ணுற்(று)
ஏலஎதிர் சென்(று)அடல்
  இராவணனை எய்தி,
நீலமலை முன்கயிலை
  நின்றதென நின்றான்,
ஆலவிடம் அன்றிவர
  நின்றசிவன் அன்னான்.

[கால இருள்-இராக் காலத்தில் தோன்றிய இருட்டு. சிந்து கதிரோன்-சிதறடிக்கும் சூரியன். கதிரோன் மதலை-சூரிய புத்திரனான சுக்கிரீவன். ஏல-பொருந்த. அடல் இராவணனை-வலிமை நிறைந்த இராவணனை. எய்தி-அடைந்து. ஆலவிடம் - ஹாலா ஹலம் என்ற கொடிய விஷம். அன்றிவர - சினந்து வர. சிவன் அன்னான் - சிவனையும் ஒத்தான்.]

சந்தம் வேறுபடுவது கவனிக்கத் தக்கது. எவ்வளவு பரபரப்பாகச் செயல்கள் நிகழப் போகின்றன என்பதைஇந்த வேறுபாடு நினைவூட்டுவதுடன், பயங்கரமான ஒரு பெருங் குத்துச் சண்டையை நடத்திக் காட்டுவதற்கும் பயன்படுவதாகும் என்பதை விரைவில் நாம் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

இராக்கால இருள் காலையில் அடர்ந்து காணப்படுவதை ஆயிரம் கிரணங்களால் சிந்திச் சிதறச் செய்யும் சூரியனைப் போலவே, இந்தச் சூரியபுத்திரனும் ராவணனுடைய சூழ்நிலையை ஒரு கலக்குக் கலக்கிச் சிதறடிக்கிறான்.

நிதானமாய்க் கண்ணுற்றான், திகிலடைந்து நிலைகெட்டுச் சிதறிய அந்தச் சபையையும், சற்றுத் திகைத்திருந்த அந்தப் பிரதாப லங்கேச்வரனையும், அந்த ராவண பராக்ரமத்திற்கும் கம்பீரத் தோற்றத்திற்கும் பொருத்தமாகவே நடைபோட்டு எதிர் செல்லுகிறானும்.

ராவணனை நெருங்கிப் போய் நிற்கிறான், மரியாதையாகச் சற்றுத் தூரத்தில் நின்று விடாமல், முகத்தோடு முகம் இடிப்பதுபோல் வந்து நிற்கிறான் வானர மகாராஜா ராட்சஸ மகாராஜாவுக்கு முன்.

நீலமலை முன்கயிலை
  நின்றதென நின்றான்.

என்பது சுக்கிரீவன் நிலை.

மலையோடு மலை மோத வந்ததுபோல் வந்து நிற்கிறான் ஒரு கணம். ராவணன் என்ற நீலமலையை அன்று அமுக்கிய அந்த வெள்ளி மலைதான் மறுபடியும் அமுக்க வந்து விட்டதோ! 'அப்படியும் இருக்குமா!' என்று ராவணனே சற்றுத் திகைத்துப் போகிறான் என்பது குறிப்பு.

வினாவும் எதிர்பாராத விடையும்

ஒரு கணம் திகைப்பு-ஒரே ஒரு கணம் தான். உடனே விஷம் போலக் கறுத்து விடுகின்றன கோபம் ஜொலிக்கின்ற முகங்கள்.

விஷம் என்றால் சாதாரண விஷமா! ஹாலாஹல விஷமே மலைபோலத் திரண்டு சினந்து சீறுவது போலக் காண்கிறான் ராவணன். ஆனால் இந்தப் பூச்சாண்டிக்குப் பயப்படுகிறவனா இப்படி வந்து நிற்கிறவன்! விஷ பட்சணம் செய்த கைலாஸபதி போல் அஞ்சாது நிமிர்கிறான்!

'இங்கே வந்த காரியம் என்ன!' என்று ராவணன் கம்பீரமாகக் கேட்க, வினாவுக்கு விடை இல்லை. விடை சொல்லிக் கொண்டிருக்க அவகாசம் ஏது!

என்றாலும், விடை கிடைத்துவிடுகிறது ராவணனுக்கு. சொல்லால் அல்ல!

'இத்திசையின் வந்தபொருள்
   என்?' என, இயம்பான்,
தத்திஎதிர் சென்று,திசை
   வென்(று)உயர் நடந்தோள்
பத்திரெடு பத்துடைய
   வன்னுடல் பதைப்பக்
குத்தினன், உரத்தில்நிமிர்
   கைத்துணை குளிப்ப.

[இத்திசையின் - இந்தப் பக்கமாக; இங்கே. பொருள் என் - காரியம் என்ன. இயம்பான்—சுக்கிரீவன் பதில் சொல்லாதவனாய். தடந்தோள் — பெரியதோள். பத்திரெடு பத்துடையவன்—இருபதும் உடையவன். உரத்தில்—மார்பிலே. நிமிர் கைத்துணை—ஓங்கிய தன் கைகள் இரண்டும். குளிப்ப - அழுந்தும்படி]

'இங்கே வந்த காரியம் என்ன?'என்று சுருக்கமாகவே தான் ராவணனும் கேட்டான். அதைக் காட்டிலும் மிக மிகச் சுருக்கமாக விடை கொடுக்க விரும்பிய சுக்கிரீவன் மறுமொழியே சொல்லாமல் நெஞ்சிலே ஒரு குத்துவிடுகிறான், 'இது தான் உன் கேள்விக்குப் பதில்' என்று சொல்வது போல!

இப்படி அங்கே நடந்ததை எவ்வளவு தத்ரூபமாக இந்தப் பாட்டின் இசை வெளியிடுகிறது! ஓதி ஓதி உணரும் போதெல்லாம் அந்தக்காட்சி அப்படியே கண்முன் வந்துவிடுகிறது.

சுக்கிரீவன் குத்திய பிறகு ராவணனும் வார்த்தையை வீணாக்க வில்லை. தீவிழித்த கண்களாலேயே பேசினான் ஒரு கணம், உடனே ஒரு காடு-மரம் அடர்ந்த காடு-அப்படியே மேல் விழுந்து நசுக்கப் பார்ப்பது போல் அடிவிழுகிறது சுக்கிரீவன் மீது.

அடி விழுகிறதா? — இடிதான் விழுகிறதா! உள்ளம் கண்ணிலே மின்னுகிறது. அந்த மின்னல் இருபது கைகளிலும் இடியாக வந்து இடிக்கிறதாம்:

திருகிய சினத்தொடு
   செறுத்(து)எரி விழித்தான்,
ஒருபது திசைக்கணும்
   ஒலித்த ஒலிஒப்பத்
தருவனம் எனப்புடை
   தழைத்(து)உயர் தடக்கை
இருபதும் எடுத்(து),உரும்
   இடித்தென அடித்தான்.

[திருகிய - மாறுபட்ட. செறுத்து — கோபித்து. எரி — எரிகிற தீ. விழித்தான் — விழித்தவனாய். ஒருபது திசைக்கணும் — பத்துத் திக்கிலும். தருவனம் - மரங்கள் அடர்ந்த காடு போல. புடை தழைத்து— பக்கங்களில் தழைத்து. உயர் தடக்கை — உயர்ந்துள்ள பெரிய கைகள். இருபதும் எடுத்து - இருபதையும் ஓங்கி எடுத்து. உரும் இடித்தென - இடி இடித்தது போல.]

சுக்கிரீவன் மீது இருபது கைகளும் ஓங்கி அடித்த அந்த ஓசையை இந்த இசையில் கேட்கிறோம்! அந்த இடிக்கு மின்னல்போல அந்த விழிகளில் தோன்றிய தீயையும் பார்த்து விடுகிறோம்.

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

65. சோர்வு நமக்கல்ல !

கொஞ்சமும் எதிர்பாராத நிலையில், ராவணன் 'சிங்கத்தை மான்கள் என்ன செய்ய முடியும்?' என்று இறுமாந்து பேசிய அதே நிலையில் 'இது செய்ய முடியுமே!' என்று இடித்துரைப்பவன் போல் வந்து குதித்து விடுகிறான் சுக்கிரீவன்.

ராமனுடைய வசீகர செளந்தரியத்தை, கருணையே உருவமாக நிற்கும் அந்தக் கற்பனை கடந்த அழகை, ராவணனைச் சூழ்ந்திருந்த தெய்வப் பெண்களும் பிறரும் கண் படைத்த பயனாகப் பார்த்துப் பிரமித்துப் பரவசமாகி யிருந்த அதே நிலையில், மயில்களுக்கு இடையே இடி விழுவதுபோல் வந்து விழுந்து விடுகிறான் சுக்கிரீவன்.

நீலமலை போல் கம்பீரமாக அமர்ந்திருக்கிறான் ராவணன். நீலமலை முன் வெள்ளிமலை போல நிமிர்ந்து நிற்கிறான் சுக்கிரீவன்.

ஆலகால விஷம் போலக் கோதிக்கிறான் ராவணன். விஷத்தைப் பட்சிக்கச் சித்தமாகி விட்ட அந்தக் கைலாசபதி போலக் காண்கிறான் சுக்கிரீவன்.

குத்துச் சம்பாஷணை

'வந்த காரியம்!' என்ற கேள்விக்குக் கிடைக்கும் பதில் எல்லாம் ராவணன் மார்பிலே ஒரு குத்து! 'இனிமேல் பேச்சுக்கு இடமேது!' இருபது கைகளும் ஓங்கி அடிக்கின்றன; இருபது கண்களும் தீயைக் கக்குகின்றன.

இனிமேல் சுக்கிரீவன் செய்வதென்ன! அடித்த ராவணனை உதைக்கிறான் :

அடித்தவிரல் பட்டஉட
லத்துழி இரத்தம்
பொடித்தெழ, உறுக்கிஎதிர்
புக்குடல் பொருத்திக்
கடுத்தவிசை யிற்கடி(து)
எழுந்து,கதிர் வேலான்
முடித்தலைகள் பத்தினும்
முகத்தினும் உதைத்தான்

[உடலத்துழி – உடலின் இடத்திலிருந்து. பொடித்தெழ – பொங்கி எழ. உறுக்கி - அதட்டி. எதிர் புக்கு – எதிரில் போய். உடல் பொருத்தி – தன் உடலை அந்த எதிரியின் உடலோடு பொருந்தத் தாக்கி. கடுத்த விசையின் - மிக்க விசையோடு. கடிது எழுந்து – விரைந்து எழுந்து. கதிர் வேலான் – ஒளியுள்ள வேலாயுதத்தை யுடைய ராவணனது.]

ராவணன் கையில் வேல் இருக்கிறது; சுக்கிரீவனோ நிராயுதபாணி. அந்த வேல் மாமனார் கொடுத்த வேல்; மந்தோதரியை மணக்கும்போது சீதனமாய்க் கிடைத்தது.

அந்த ராவணன் மீது விசையோடு கிளம்பி, கிரீட மணிந்த தலைகளிலும், முகத்திலும் உதைக்கிறான் சுக்கிரீவன். வேலாயுதத்தை ராவணன் உபயோகிக்க இயலாத நிலையில் சுக்கிரீவன் மேலே கிளம்பி விடுகிறான். வேல் மாப்பிள்ளை போல் கையில் ஜம் மென்று கொலுவிருக்கிறது!

உதைத்தவனை வதைத்து விட வேண்டும் என்ற கடுஞ் சினத்துடன் ராவணன் சுக்கிரீவனுடைய கால்களைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளித் தன் கால்களால் அவன் உடம்பைத் துவைக்கிறான் :

உதைத்தவன் அடித்துணை
பிடித்தொரு கணத்தில்
பதைத்துலை வுறப்பல
விதத்திகல் பரப்பி,
மதக்கரியை உற்றரி
நெரித்தென மயக்கிச்
சுதைத்தல னிடைக்கடி(து)
அடிக்கொடு துகைத்தான்.

[அடித்துணை—கால்கள் இரண்டையும். ஒரு கணத்தில் – ஒரு கணப் பொழுதிற் குள். பதைத்து உலைவுற – அந்தச் சுக் கிரீவன் பதைத்து உலைந்து போகும்படி. பல விதத்து – பலதரப்பட்ட. இகல் பரப்பி—வலிமையை மிகுதியாகக் காட்டி. மதக் கரியை உற்று – மதயானையைப் பொருந்தி. அரி – ஒரு சிங்கம். நெரித் தென – நெருக்கிறைற் போல. சுதைத் தல னிடை – சுண்ணும்பு பூசிய தலத்தினிடத் திலே. கடிது – விரைவாக(த் தள்ளி). அடிக்கொடு – தன் கால்களைக் கொண்டு.]

சுக்கிரீவன் சற்று மயங்கிப் போனுன். எனினும் விரைவில் சமாளித்துக் கொள் கிருன்:

துகைத்தவன் உடற்பொறை
சுறுக்கொள இறுக்கித்
தகைப்பெரு வலத்தொடு
தலத்திடை அமுக்கி,
வகைப்பிறை நிறத்தெயி
றுடைப்பொறி வழக்கிக்
குகைப்பொழி புதுக்குருதி
கைக்கொடு குடித்தான்.

[துகைத்தவன் உடற்பொறை – தன் னைத் துகைத்தவனுடைய உடற்பாரம். சுறுக் கொள – நெருப்பினுல் வேகும்படி. தகைப்பெரு வலத்தோடு – தகைதலைக் கொண்ட பெரிய வலிமையோடு. தலத் திடை – பூமியிலே. வகைப் பிறை – பல வகையான பிறையின். நிறத்து எயிறு – தன்மை கொண்ட பற்கள். உடைப் பொறி வழக்கி – உடைவதிலிருந்து தீப் பொறி வழங்கச்செய்து. குகைப் பொழி– குகை போன்ற வாயிலிருந்து பொழிந்த. புதுக் குருதி –புதிய இரத்தத்தை. கைக் கொடு - கையினுல்.]

இப்படியெல்லாம் நடக்கிறது இந்தச் சுக்கிரீவ - தசக்கிரீவர் குத்துச் சண்டை. இருவரும் நாகரிகமாய்ப் போரிடவில்லை என்றே சொல்ல வேண்டும்.

தன்னை அமுக்கிய சுக்கிரீவனை ராவ ணன் தன்னுடைய கைகளால் கிருகிரு வென்று சுழற்றுகிருன். அந்த ராவணன் மார்பில், அப்படி அவன் தன்னைச் சுழற் றும் போதே, சுக்கிரீவன் தன் நகம் அழுந்தக் குத்துகிருன். ராவணன் சற்று மயங்கியதும் சுக்கிரீவன் அவனைத் தூக்கி அகழியில் போட்டு விடுகிருன்.

தன்னை அகழியில் போட்ட சுக்கிரீ வனைத் தானும் அகழியில் தள்ளிவிட வேண்டுமென்று ராவணன் கிளம்பி வந்து அப்படியே செய்துவிட்டு, " ஏறு பார்க்கலாம்" என்று சொல்வதுபோல நிற்கிருன். சுக்கிரீவனே உடனே ஏறி வருகிருன். இருவரும் கட்டிப் புரண்டு ஒரு சேர அகழியில் தொப்பென்று விழு கிருர்கள்.

நம் கண் முன்னே!

அங்கேயே மல்ல யுத்தம் நடக்கி றது. எவ்வளவு வேகமாக; எவ்வளவு விநோதமாக!

விழுந்தனர், சுழன்றனர்,
வெகுண்டனர் திரிந்தார்,
அழுந்தினர், அழுந்திலர்;
அகன்றிலர், அகன்ருர்;
எழுந்தனர், எழுந்திலர்;
எதிர்ந்தனர், முதிர்ந்தார்;
ஒழிந்தனர், ஒழிந்திலர்;
உணர்திலர்கள் ஒன்றும்!

[வெகுண்டனர் திரிந்தார் – கோபத் துடன் வலசாரி இடசாரியாகத் திரிந் தார்கள். அழுந்தினர் அழுந்திலர் – மண் ணில் அழுந்திக் கிடந்தார்கள் ஒரு கணம், அழுந்திக் கிடக்கவே இல்லையோ என்று சொல்லும்படி அவ்வளவு விரைவாக வெளிப்பட்டார்கள். அகன்றிலர் அகன் ருர் – ஒருவரை ஒருவர் நெருங்கியும் நெருங்காமலும் போரிட்டார்கள். எழுந் தனர் எழுந்திலர் – கீழே கிடந்தவர்கள் எழுந்து விட்டார்களா, எழுந்ததே இல் லையா என்று பிரமிக்கும்படி எழுந்தும் கிடந்தும் போரிட்டார்கள். எதிர்ந்த னர் முதிர்ந்தார்.—ஒருவரை ஒருவர் எதிர்த்து நின்று போராடும் போதே வெறிகொண்டு முதிர்ந்து போரிட்டார் கள். ஒழிந்தனர் ஒழிந்திலர்—சற்றுப் போரிலிருந்து நீங்கியவர்கள் போலக் காணப்பட்டார்கள், கொஞ்சமும் நீங்க வில்லையோ என்று பிரமிக்கும் விதத்தி லும் போரிட்டார்கள். உணர்ந்திலர்கள் ஒன்றும் – என்ன நடக்கிறது என்ப தைத் தாங்களே சிறிதும் உணர்ந்து கொள்ளாமல் இருவரும் போரிட்டார் கள்.]

வெகு விரைவில் வெவ்வேறு போர்ச் செயல்கள் நடைபெறுகின்றன. முரண் பட்ட பல செயல்கள் ஒன்றன் பின் ஒன் ருக வெகு வேகமாய் நிகழ்கின்றன.

'நான் ஒன்றைச் சொல்வதற்கு முன் அதற்கு மாருன வேருெரு செயல் நிகழ்ந்து முந்தின செயல் நிகழாது போல் அல்லவா தோன்றுகிறது!'

என்று கவி அந்த மல்ல யுத்தச் செயல் களைக் காட்டிக் காட்டி வியாக்கியானம் செய்துகொண்டே போகிறான்.

அதி உக்கிரமாகப் படுவேகமாக நடக் கிறது ராவண சுக்கிரீவ யுத்தம் நம் கண்ணுக்கெதிரே! இத்தகைய இந்திர ஜாலத்தை நடத்திக் காட்டுகிறது இந் தக் கவி. ஓதி ஓதிப் பாருங்கள்.

அந்த அகழியிலே சுக்கிரீவன் ராவண னுடம்பை வலமும் இடமுமாகச் சுழலச் செய்து கடைகிறான் ஒருகணம். அடுத்த கணமே ராவணன் சமாளித்துக் கொண்டு, வெகு மும்முரமாய்ச் சுக்கிரீவ னோடு போராடுகிறான், தன்னுடைய தோள்களால் சுக்கிரீவனைச் சுற்றிக் கொண்டு.

சூரியனை மறைக்கும் மேகம் போல் சுக்கிரீவனை மறைத்துவிடுகிறான் ராவ ணன். சுக்கிரீவனோ,

கோபுரம் அடங்க
இடியத்தனி குதித்தான்

[கோபுரம் அடங்க – கோபுரம் எல் லாம். தனி குதித்தான் – தனியே குதித் தான்.]


இந்த நிலையில் ராவணன் சுக்கிரீ வனைப் பின் தொடர்ந்து வந்து 'தின் றிடுவேன்!' என்று பொங்கிய கோபத் துடன் வானர வீரனுடைய இரண்டு கைகளையும் பிடித்துக் கொள்கிறான்:

தின்றிடுவன் என்றெழு
சினத்திகல் அரக்கன்

பின்தொடர வந்திரு
கரத்துணை பிடித்தான்

[என்று எழு சினத்து – என்று எழு கின்ற சினத்தையுடைய. இகல் அரக் கன் — வலிமையுள்ள ராவணன். இரு கரத்துணை-இரண்டு பெரிய கைகளையும்.]

குதித்து நின்ற சுக்கிரீவன் தன்னைத் தொடர்ந்து வந்த ராவணனோடு மறுபடி



யும் மல்ல யுத்தம் செய்கிருன்! நிலத்தில் இட்டுத் தேய்க்கிருன் ராவணனை.

அந்த ராவணனே யந்திரம்போல் விரைவில் கிளம்பிச் சுக்கிரீவனை அப்பால் எடுத்து எறிகிருன். சுக்கிரீவனே பந்து போல் விரைந்து எழுந்து வந்து மறுபடியும் எதிரே போர் செய்யத் சித்தமாகி விடுகிருன்.

இந்தப் போராட்டத்தை இதோ பாருங்கள் :

வந்தவனை நின்றவன்
வலிந்தெதிர் மலைந்தான்,

அந்தகனும் அஞ்சிட
நிலத்திடை அரைத்தான் ;

எந்திரம் எனக்கடி(து)
எடுத்தவன் எறிந்தான் ;

கந்துகம் எனக்கடி(து)
எழுந்தெதிர் கலந்தான்.

[வந்தவனை – வந்த ராவணனை. நின்றவன் – நின்ற சுக்கிரீவன். வலிந்து எதிர் மலைந்தான் – வலி கொண்டு எதிரே மலைந்தவனுய். அந்தகனும் – யமனும், நிலத்திடை – நிலத்திலே. கடிது – விரைவில். கந்துகம் – பந்து. எதிர் கலந்தான்– எதிரே வந்து சேர்ந்தான்.]

இந்தப் போரின் அதிர்ச்சி பின்வருமாறு வர்ணிக்கப்படுகிறது :

படிந்தன மரம்தரை ;
பகிர்ந்தன பரப்பும் ;

கொடுஞ்சினம் முதிர்ந்தனர்,
உரத்தின்மிசைக் குத்த,

நெடுஞ்சுவர் பிளந்தன
நெரிந்த நிமிர்குன்றம் ;

இடிந்தன தகர்ந்தன
இலங்கைமதில் எங்கும் !

[படிந்தன மரம் தரை – மரம் தரையில் விழுந்து கிடந்தன. பகிர்ந்தன பரப்பும்—பரவிய நிலங்களும் பிளவுபட்டன. கொடுஞ்சினம் முதிர்ந்தனர் – இருவரும் கொடிய சினம் முதிரப் போர் புரிந்தார்கள். உரத்தின் மிசைக் குத்த—வலிமையோடு மேல் குத்தித் தாக்குவதால். நெரிந்த நிமிர் குன்றம்—நிமிர்ந்த குன்றங்கள் நெரிந்து போயின.]

இப்படி யெல்லாம் அதிர்ச்சி ஏற்படும்படி ராவண சுக்கிரீவர் இருவரும் படு வேகமாய்ப் போர் புரிகிருர்கள். காற்ருடி போலச் சுழன்று சுழன்று மல்ல யுத்தம் செய்கிருர்கள்.

இந்தப் போரிலே இவர்களுடைய உடல்நிலை எப்படி யெல்லாம் மாறி மாறி வருகிறது என்பதை ஒருவராலும் அறிந்து கொள்ள முடியவில்லை.

'இப்போது அவர்கள் பிரிந்திருக்கிருர்களா? அல்லது பொருந்திப் போராடுகிருர்களா!' என்று தெளிவாக அரக்கர்களாலும் தெரிந்து கொள்ள முடியவில்லையாம்.

ஒருவரை ஒருவர் தூக்கி எறிகிருர்கள் என்றதுதான் தெரிகிறது. 'யார் யாரைத் தூக்கி யெறிந்தார்!' என்பது தெரியவில்லை; அரக்கர்களுக்கும் தெரியவில்லையாம்.

ஏன், இன்னுர் இன்னுரை நெருங்கியுள்ளார் என்பது 'கூடப் புரியவில்லை. எதிரே நின்று பார்க்கும் அரக்கர்களும் இந்தப் போர்த் தொழிலின் மர்மம் தெரியாது திகைத்துப் போகிருர்களாம்.

பிரமித்துப் போவது மட்டுமா?— இந்த அமர்த் தொழிலைப் பார்ப்பவர்களே மனம் சோர்ந்து போகிருர்களாம். தாங்களே அகப்பட்டுக் கொண்டது போல. ஆனல் நமக்கு மட்டும் உற்சாகம் தான்!

இங்கே அரக்கர்களிடையே மனச் சோர்வு ஏற்பட, அங்கே சுவேல மலையில் ராமன் முதலானவர்களின் நிலை என்ன? திடீரென்று, கிளம்பிப் போன சுக்கிரீவன் இன்னும் திரும்பி வர வில்லையே என்று ராமனுக்கும் கவலைதான், மனச் சோர்வு தான்!

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

66. பாத காணிக்கை

ஒருவருக் கொருவர் குத்துத் திறமையில் இளைத்தவரில்லை என்ற நிலையில் சுக்கிரீவ – தசக்கிரீவர் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த வெறியில் ராமன் முதலானவர்களையும் மறந்து விட்டது போலக் காணப்படுகிறான் சுக்கிரீவன்.

ஆனால் ராமனுக்கோ சுக்கிரீவனை மறந்திருக்க முடியுமா ? ஒருவரோடும் சொல்லிக் கொள்ளாமல், 'இவன் என்ன செய்யப் போகிறான் !' என்று ராமன் முதலானவர்கள் ஊகிக்கவும் முடியாத வேகத்தில், அந்த ராவணன் மேல் அப்படியே பாய்ந்து விட்டானல்லவா !

ஐயோ, கெடுத்தாயே !

'போனவன் இன்னும் வரக் காணவில்லையே' என்ற நினைப்பில் ஒரு கணம் யுகமாகிறது ராமனுக்கு !

இன்னதோர் தன்மை
எய்தும் அளவையின்,
எழிலி வண்ணன்

மன்னுயிர் அனைய
காதல் துணைவனை
வரவு காணான்,

'உன்னிய கருமம்
எல்லாம் உன்னொடும்
முடிந்த !' என்னாத்,

தன்னுணர்(வு) அழிந்து
சிந்தை அலம்வந்து
தளர்ந்து சாய்ந்தான்.

[இன்னதோர் தன்மை எய்தும் அளவையின் – இவ்வாறான தன்மை நிகழும்போது. எழிலி வண்ணன் – மேக வண்ணனான ராமன். மன் உயிர் அனைய – தனது நிலைபெற்ற உயிரை ஒத்த. காதல் துணைவனை வரவு காணான் – அன்பிற்குரிய சகோதரனுடைய வரவைக் காணாதவனாய். உன்னிய கருமம் எல்லாம் – நான் செய்யக் கருதியிருந்த செயல்களெல்லாம். உன்னொடும் முடிந்த – உன்னோடும் முடிந்து விட்டன. என்னா – என்று சொல்லி. அலம் வந்து – ஒடுங்கி.]

ராமன் சுக்கிரீவனைத் தம்பியாகவும் தோழனாகவும் ஒப்புக்கொண்ட நாள் முதல், இருவரும் 'உடல் இரண்டு, உயிர் ஒன்று' என்றவாறு பிராண சிநேகிதர்களாகவே நடந்து கொள்கிறார்களாம்.

சுக்கிரீவன் செல்வம் பெற்றதும் அந்தக் கள் வெறியிலும் போக வாழ்க்கையிலும் ராமனை மறந்திருந்ததுண்டு. அதற்காக ராமன் லட்சுமணன் வாயிலாகக் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள எண்ணியதும் உண்டு. அந்த நிகழ்ச்சியை 'அப்படி ஒன்று நடந்தது' என்ற நினைவே இல்லாமல் ராமன் மறந்துவிடும்படி அவ்வளவு நட்புக் காதலுடன் சுக்கிரீவன் ராமனுடன் ஒத்துழைத்திருக்கிறான் என்பது குறிப்பு.

'இந்தச் சுக்கிரீவன் இல்லாமல் நான் மாத்திரம் செய்யக்கூடிய காரியம் ஒன்றும் இல்லை' என்று ராமன் நம்பும் அளவிற்கு இவர்களுக்கிடையே நட்பு முதிர்ந்துவிடுகிறது. இந்த நிலையில் சுக்கிரீவனுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்து விட்டால் என் செய்வது !

சுக்கிரீவன் ஆணை கடுமையானது என்று சொல்வதுண்டு. இந்த ஆணை தான் வானரப் படையினருக்கிடையே உறுதியான கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருக்கிறது. எனவே, சுக்கிரீவனுக்கு நேரும் தீங்கு அரக்கர்களுக்கு வெற்றி தான் என்றும் ராமன் கருதுகிறான்.

சுக்கிரீவ கோபம் காரியத்தைக் கெடுத்துவிட்டதே என்று வருந்தும் ராமனைப் பாருங்கள் :

'ஒன்றிய உணர்வே
ஆய ஒருயிர்த்
துணைவ! உன்னை
இன்றியான் உளனாய்
நின்(று), ஒன்(று)
[இயற்றுவ(து)
இயைவ தன்றால்;
அன்றியும் துயரத்-
திட்டாய் அமரரை;
அரக்கர்க் கெல்லாம்
வென்றியும் கொடுத்தாய்;
அந்தோ கெடுத்த(து) உன்
வெகுளி!' என்றான்.

[ஒன்றிய - ஒன்றுபட்ட. ஆய - ஆகிய. இன்றி - இல்லாமல். யான் உளனாய் நின்று - நான் மாத்திரம் உயிருடனிருந்து. துயரத்து இட்டாய் அமரரை - தேவரைத் துன்பத்திற்கு உட்படுத்தினாய். வெகுளி - கோபம்.]

ராவணனுடைய மாய வலிமையையும் காவல் - திறத்தையும் நினைத்தால், சுக்கிரீவன் தப்பி வருவது அரிதென்றே தோன்றுகிறது:

தெய்வவெம் படையும்
தீரா மாயமும்
வல்ல தீயோன்
கையிடைப் புக்காய்;
நீவே(று) எவ்வணம்
கடத்தி காவல்?
வையம் ஓர் ஏழும்
பெற்றால் வாழ்வனே
வாரா யாகில்?
உய்வனே? தமிய
னேனுக்(கு) உயிர் தந்த
உதவி யோனே!

[தெய்வ வெம் படையும் - கொடிய தெய்வ அஸ்திரங்களும், தீயோன் கையிடைப் புக்காய் - தீயோனாகிய ராவணனுடைய கையிலே போய் அகப்பட்டுக்கொண்டாய். வேறு எவ்வணம் கடத்தி காவல் - நீ அவனுடைய காவலிலிருந்து வேறாகும்படி எவ்வண்ணம் கடந்து வந்துவிடுவாய். வையம் ஓர் ஏழும் பெற்றால் - ஏழு லோகங்களையும் நான் பெற்றாலும். வாழ்வனே - நான் நல்வாழ்க்கை பெற்று வாழமுடியுமா. உய்வனே-உயிர் பிழைத்துத்தான் இருக்க முடியுமா. தமியனேனுக்கு - தனிப்பட்ட எனக்கு: மனைவியைப் பிரிந்து கதியற்றிருந்த எனக்கு.]

பழைய நினைவுகள்

அந்த நாள் நினைவிற்கு வருகிறது. ராவணன் 'மயிலுடைச் சாயலாளை' வஞ்சித்துக் கவர்ந்து சென்ற அந்தக் காலம் தான். அப்போது தனிப்பட்டுத் துயர வெந்தியில் விழுந்து உயிரே போய்க் கொண்டிருப்பது போன்ற அந்த நினைவு வருகிறது.

அந்த நிலையில் தானே கிஷ்கிந்தைப் பக்கத்தில் ராம லட்சுமணர் திரிந்து கொண்டிருந்தார்கள். அந்த நிலையில் சுக்கிரீவனுடைய நட்பு ஏற்பட்டது: சீதையின் அணிகலன்களைக் காண நேர்ந்தது. அப்போது நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையே உயிர் ஊஞ்சலாடச் சுக்கிரீவன் எத்தனை விதமாக ஆறுதல் சொன்னான்!

தன் பரிவாரங்களை அனுப்பிச் சீதையைத் தேடச் செய்ததும், செய்தி தெரியும் வரை ஊக்கம் அளித்து உற்சாகப் படுத்திக்கொண்டிருந்ததும், சீதையின் செய்தியை அனுமனைக் கொண்டு தெரிவித்ததும் எல்லாம் இப்போதுதான் நிகழ்வது போல் மனக் கண் முன் தோன்றுகின்றன.

இந்நிலையில்தான்,

உயிர் தந்த
உதவி யோனே!

என்று சுக்கிரீவனை அதே மனக்கண் முன் கண்டு கூப்பிடுகிறான்.

அன்பால் அழிவு

'ஒன்று நினைக்க வேறொன்று விளைந்ததே!' என்று பிரலாபிக்கிறான். தான் போர்க்களத்தில் கொல்லப்பட்டதாகவே புலம்புகிறான்.

தன்னைக் கொன்றவன் சுக்கிரீவன்தான் என்றும் சொல்லுகிறான்:

இறந்தனை என்ற
போதும், இருந்(து)யான்
அரக்கர் என்பார்
திறம்தனை உலகின்
நீக்கிப் பின்உயிர்
தீர்வன் என்றால்,
'புறந்தரு பண்பி
னாய உயிரொடும்
பொருந்தி னானை
மறந்தனன்; வலியன்!'
என்பார்; ஆதலால்
அதுவும் மாட்டேன்.

[அரக்கர் என்பார் திறந்தனை – அரக்கர் என்பவர்களின் கூட்டங்களை. உலகன் நீக்கி – உலகத்திலிருந்து நீக்கி. பின் உயிர் தீர்வன் என்றால் – பின்பு உயிரை விடுவேனேயானால். புறந்தரு பண்பின் ஆய – பாதுகாத்தலாகிய தன்மையோடும் கூடிய. உயிரோடும் பொருந்தினானை – உயிரோடும் பொருந்திய நண்பனை. வலியன் – மனம் வலியன்; கடின சித்தம் உள்ளவன்.]

சுக்கிரீவன் இல்லாத வெற்றியும் வெற்றியாகுமா என்று கேட்கிறது ராமனுடைய நெஞ்சு. இனி வேறொருவரையும் போரில் இறக்க விடாமல் வெற்றி பெற்று நகரத்திற்குத் திரும்பிச் சென்றாலும் சுக்கிரீவனை இழந்த துயரம் போகாதே!— என்று நொந்து போகிறது இதயம்.

'உனக்கு என் மீதுள்ள அன்பினால் தான் நீ அப்படிக் கிளம்பிப் போனாய் என்பது எனக்குத் தெரியும்; அந்த அன்பினால் அழிவது செய்தாய்!' என்று கதறுகிறான் ராமன்:

அழிவது செய்தாய்
ஐய! அன்பினால்
அளியத் தேனுக்கு;

ஒழிவரும் உதவி
செய்த உன்னையான்
ஒழிய வாழேன்;

எழுபது வெள்ளம்
தன்னின் ஈண்(டு)ஓர்பேர்
எஞ்சா(து) ஏகிச்

செழுநகர் அடைந்த
போழ்தும், இந்துயர்
தீர்வ துண்டோ?

[அழிவது செய்தாய் – அழிவதற்கு ஏதுவான செய்கையைச் செய்தாய். அளியத்தேனுக்கு – காக்கப்படத் தக்க எனக்கு. ஒழிவரும் உதவி – ஒழிவில்லாத உதவி; என்றும் நிலைத்து நிற்கும் உதவி. எழுபது வெள்ளம் தன்னின் – இந்த எழுபது வெள்ளம் சேனையில். ஈண்டு ஓர் பேர் – இங்கே ஒருத்தரும். எஞ்சாது – குறையாமல். ஏகி – வெற்றியுடன் போய். செழுநகர் அடைந்த போழ்



தும்- வளப்பமுள்ள நகரத்தை அடைந்த காலத்தும்-]

உயிர் மீண்டது !

இப்படியெல்லாம் வருந்திக் கொண்டிருக்கும் ராமனுக்கு அழுகையே வந்துவிடுகிறது. அப்போது இவனுடைய அடிகளில் இரத்தினங்களைப் பாத காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறான் ஒருவன்.

அழுது கொண்டிருக்கும் ராமனைத் தொழுது கொண்டு அயல் நிற்கும் சுக்கிரீவனைப் பார்த்ததும் தான் உயிர் வருகிறது ராமனுக்கு—போன உயிர் மீண்டு வருவது போல.

ஆம்; இரத்தினக் காணிக்கைகளுடன் வந்திருப்பவன் சுக்கிரீவன்தான். இந்த இரத்தினங்களை எங்கே வாங்கினான் !

என்(று) அவன் இரங்கும்
காலத்(து), இருவரும்
ஒருவர் தம்மின்

வென்றிலர் தோற்றி
லாராய் வெஞ்சமம்
விளைக்கும் வேலை,

வன்திறல் அரக்கன்
மௌலி மணிகளை
வலியால் வாங்கிப்

'பொன்றினன், ஆகின்
நன்றென்(று)அவன்வெள்க,
இவனும் போந்தான்.

[அவன் இரங்கும் காலத்து – அந்த ராமன் வருந்திக் கொண்டிருக்கையில். இருவரும் ஒருவர் தம்மின் வென்றிலர் தோற்றிலாராய் – இருவரும் தம்முள் எவரும் வெற்றி தோல்வி பெறாதவராய். வெஞ்சமம் விளைக்கும் வேலை – கொடிய போரை நடத்தும் போது. வன்திறல் அரக்கன் – மிக்க வலிமை யுள்ள ராவணனது. மௌலி மணிகளை – கிரீடத்திலுள்ள மணிகளை. வலியால் வாங்கி – வலிமையால் பறித்துக் கொண்டு. பொன்றினன் ஆகில் நன்று – நான் செத்தேனேயானால் நல்லது என்று. அவன் வெள்க – அந்த ராவணன் வெட்கம் அடையும்படி. இவனும் போந்தான் – இந்தச் சுக்கிரீவனும் இங்கே வந்து சேர்ந்து விட்டான்.]

எப்படியோ ஏதோ ஒரு பிரமாத முயற்சிசெய்து அம்மணிகளோடு கிளம்பி விடுகிறான்.

அந்தத் தீயோனுக்கு மாயம் செய்யவோ, தெய்வ வெம்படைகளை எடுக்கவோ சுக்கிரீவன் அவகாசம் கொடுக்கவே யில்லை.

அந்த நினைவுகள் அந்தப் பத்து மூளைகளில் எங்கேனும் எழுவதற்கே இடம் கொடுக்காமல் அவ்வளவு தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தான் சுக்கிரீவன் என்று சொல்ல வேண்டும்.

குத்துச் சண்டையில் தோல்வி அடையக் கூடாது என்ற திட சங்கற்பத்துடன் சுக்கிரீவனுடைய குத்துகளையும் சேட்டைகளையும் சமாளித்துக் கொண்டிருந்த ராவணனுக்குச் சுக்கிரீவன் பளிச்சென்று பாய்ந்து வந்த வேகத்துடன் போய் விடுவானென்று நினைத்துப் பார்க்கவும் நேரமில்லை.

போகும்போது துணிந்து முடிமணிகளைப் பறித்துக் கொண்டு போவான் என்று எதிர் பார்க்கவே யில்லை. 'இந்த அவமானத்தைக் காட்டிலும் அவன் என்னைக் கொன்றிருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்!' என்று அலறுகிறது ஆணவ இதயம்.

இந்த நிலையில் ராவணனை விட்டு விட்டுத் தான் கொணர்ந்த முடிமணிகளை ராமனது திருவடித்தலத்தில் காணிக்கையாக வைத்துக் கும்பிட்டு அயல் ஒதுங்கி நிற்கிறான் :

கொழுமணி முடிகள்
தோறும் கொண்டன
மணியின் கூட்டம்

அழு(து)அய ருறுகின்
றான்தன் அடித்தலம்
அதனில் சூட்டித்

தொழு(து)அயல் நாணி
நின்றான் ; தூயவர்
இருவ ரோடும்

எழுபது வெள்ளம்
யாக்கைக்(கு) ஓர்உயிர்
எய்திற் றன்றே !

[கொழுமணி முடிகள் தோறும்-சிறந்த மணிகள் அழுத்திய கிரீடந்தோறும். கொண்டன மணியின் கூட்டம் – பறித்துக் கொண்டனவான இரத்தினக் கூட்டத்தை. அயறுகின்றான் தன் – உளம் வருந்திக் கொண்டிருக்கிறவனான ராமனுடைய. யாக்கைக்கு – உடம்பிற்கு. எய்திற்றன்றே – வந்து சேர்ந்தது.]

சரி; ராவணனுடைய முடிமணிகளையே பறித்துப் பாதகாணிக்கை செலுத்தியவன் ஏன் இப்படிப் பெருமிதமின்றி அயல் ஒதுங்கி நாணிக் கோணி நிற்க வேண்டும்!

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

67. என் செய்தாய் நீ ?

வளர்ந்து கொண்டேயிருக்க வேண்டும்; அல்லது தளர்ந்து கொண்டேயிருக்கவேண்டும்; இருந்தபடியே இருப்பதென்பது இயலாத காரியம். நட்பிலும் இந்த விதிக்கு விலக்கு இல்லை.

சுக்கிரீவனை ராமன் சகோதரனாகவும் நண்பனாகவும் கொண்டு அவனுடைய உதவி பெற்றுத் தானே இலங்கையில் படையெடுத்து வந்திருக்கிறான். இவர்களுக்கிடையே நட்பு நாளடைவில் வளர்ந்து கொண்டே யிருப்பதாகக் கம்பன் காட்டுகிறான், இதைக் காட்ட ஒரு வாய்ப்பைக் குத்துச் சண்டையை ஒட்டி அமைத்துக் கொள்கிறான்.

சுக்கிரீவனை வரக்காணாது ராமன் வருந்திக் கூறும் கூற்றாக வரும் சில பாடல்களில் ராம சுக்கிரீவ நட்பு நிலையை விவரமாய்க் காட்டியபின், கவிக் கூற்றாகச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருப்பதையும் நாம் கருத்தூன்றிக் கவனிப்பது நலமாகும்.

உயிர் வந்தது

தான் கொணர்ந்த. மணிகளைச் சுக்கிரீவன் அடியுறை (பாத காணிக்கை) யாக வைத்துத் தொழுததும், அவன் என்ன செய்தான் எனபதைக் கூட ராமன் அவ்வளவாகக் கவனிக்க வில்லை. மகாராஜா உயிரோடு வந்து சேர்ந்ததே போதும் என்று எண்ணத் தோன்றுகிறது ராமனுக்கு.

சுக்கிரீவன் உயிரோடு மீண்டதும் ராமனுக்கு உயிர் வந்தது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது. லட்சுமணனுக்கும் அப்படியே; அங்குள்ள எல்லாருக்கும் அப்படியே தான்

'தூயவர் இருவ'ருக்கும் ஓர் உயிர் வந்து விட்டது என்று சொல்லும் கவிஞன்,

எழுபது வெள்ளம்
யாக்கைக்(கு) ஒருயிர்
எய்திற் றன்றே !

என்றும் சொல்லுகிறான்.

இரு கொழுகொம்பு

ராம லட்சுமணர் போலவே வானர சேனைகளெல்லாம் உயிரற்றன போல் இருந்தன என்று கூறுவதால் சுக்கிரீவன் ராம லட்சுமணர்களுக்கு ஒத்த நட்புக் காதலனாயிருந்ததுடன், அங்கதன் முதலான வானரத் தலைவர்களுடனும் மனங் கலந்து பழகி வந்தான் எனக் கருதலாம், சாதாரணப் படை வீரர்களிடத்திலும் அன்பு கொண்டு, அவர்களும் தன்னிடம் அன்பு கொள்ளுமாறு நடந்து வந்தான் என்பதும் இங்கே வலியுறுத்தப்படுகிறது.

சுக்கிரீவ குணாதிசய வளர்ச்சியைக் காட்டுவதற்கு இங்கே ஓர் அருமையான கொழுகொம்பு காணப்படுகிறது. இதே பாட்டில்,

தொழு(து) அயல் நாணி
நின்றான்

என்ற குறிப்பும் சேர்ந்துதான் சுக்கிரீவ குணாதிசயம் படர்ந்து வளரும் போக்கைச் சுட்டிக் காட்டுகிறது.

தீட்டும் மருந்தும்

இப்படிச் சுக்கிரீவனை ஒருவாறு தெரிந்துகொண்டு, இனி என்ன நடக்கிறது என்பதைக் கம்பன் நடத்தும் கதைப் போக்கிலே காண்போம். அருகே ஒதுங்கி ஒடுங்கி நிற்கும் சுக்கிரீவனைத் தான் ராமன் பார்க்கிறான், தன் அடித் தலத்தில் என்ன செய்தான், எதை வைத்தான் என்பதைக் கொஞ்சமும் கவனிக்காமலே சுக்கிரீவனைக் கண்டதும் பொங்கிய கண்ணீர் வேறொன்றைப்

பார்க்க இடங் கொடுக்குமா? சிநேக மணியைப் பார்த்ததும் வேறு மணிக ளைப் பார்க்க முடியுமா!

சுக்கிரீவன் மீது இரத்தம் கண்டான்; இரத்தினங்களை உடனே பார்த்திருப் பானா? கண்ணீர் சொரிந்தான்.

அப்படியே தழுவிக் கொள்கிறான்:

என்புறக் கிழிந்த
புண்ணின் இழிபெருங்
குருதி யோடும்,

புன்புலத்(து) அரக்கன்
தன்னைத் தீண்டிய
புன்மை போக,

அன்பனை அமரப்
புல்லி மஞ்சனம்
ஆட்டி விட்டான்,

தன்பெரு நயனம்
என்னும் தாமரை
பொழியும் நீரால்!

[என்பு உற—எலும்பு வரையிலும் பொருந்த. புண்ணின் – புண்களிலிருந்து. இழி பெருங்குருதியோடும்–வழிகிற மிக்க இரத்தத்துடனே, புன் புலத்து – இழிந்த அறிவையுடைய; அறத் துறைக்கு மாறு கச் செல்லும் அறிவையுடைய. புன்மை – (இங்கே) தீட்டு. அமரப் புல்லி – இறுகத் தழுவி, பெரு நயனம் – பெருங் கண்கள்; மகிழ்ச்சியால் விரிந்த கண்கள்.]

நண்பனை ராமன் இறுகத் தழுவிக் கண் ணீர் சொரியவே, தீட்டும் தீர்ந்தது: புண்ணிலிருந்து வந்து கொண்டிருந்த இரத்தமும் நின்று விட்டதாம். ஆறாத புண்ணும் ஆறிவிடுமே அன்பு – வைத்தி யத்தினால்!

அகப்புண்ணுக்கும் புறப்புண்ணுக்கும், அகத்தீட்டுக்கும் புறத்தீட்டுக்கும் ஒருங்கே மருந்தாகிறது, ராமனது நட் புக் காதல்.

'தீண்டாச் சாதி'யைக் கம்பன் ஒப்புக் கொள்வதில்லை. தீண்டத் தகாதது தீமைதான். ராவணன் பிரமனது கொள்ளுப்பேரனான பிராமணனாக இருந் தும் தருமவிரோதியாகிய தீயவனானதால் தீண்டத் தகாதவனாகி விட்டான் என்பது குறிப்பு.

கண்ணீர் பேசுகிறது!

சுக்கிரீவன் மீது இரத்தத்தையும் அந்தப் புண்களையும் நன்றாகக் கவனித் துப் பார்ப்பதற்கு முன்பே ராமன், தன் னைச் சுக்கிரீவன் திடீரென்று அப்படிப் பிரிந்து போனது குறித்து 'இது தகுமா, தருமமா?' என்று கண்ணீரால் முறை யிட்டுக் கொள்கிறான்:

'ஈர்கின்ற தன்றே
என்தன் உள்ளத்தை;
இங்கும் அங்கும்

பேர்கின்ற(து) ஆவி;
யாக்கை பெயர்கின்ற(து)
இல்லைப் பின்னை;

தேர்கின்ற சிந்தை
யன்றோ திகைத்தனை!'
என்று தெண்ணீர்

சோர்கின்ற அருவிக்
கண்ணான், துணைவனை
நோக்கிச் சொல்லும்.

[ஈர்கின்றதன்றே – பிளக்கிறதன்றே, பேர்கின்றது ஆவி – என் உயிர் போவ தும் வருவதுமாகத் தத்தளிக்கிறது. பின்னை – பின்னும். தேர்கின்ற சிந்தை யன்றோ திகைத்தனை – ஆலோசித்துப் பார்க்கவல்ல உன் மனம் திகைத்தா யன்றோ. தெண்ணீர் சோர்கின்ற – தெளி வான நீர் வழிகின்ற; முத்து முத்தாய்க் கண்ணீர் வடிக்கின்ற.]

வெற்றியும் தோல்வியே!

சுக்கிரீவன் மேலுள்ள புண்களையும் இரத்தத்தையும் கண்ணுற்றதும் ராமன்,

கல்லினும் வலிய
தோளாய்! நின்னை அக்
கருணை யில்லோன்

கொல்லுதல் செய்தா
னுகில், கொடுமையால்
குற்றம் பேணிப்

பல்பெரும் பகழி
மாரி வேரொடும்
பறிய நூறி

வெல்லினும், தோற்றேன்
யானே அல்லனோ,
விளிந்தி லாதேன்?

[பல்பெரும் பகழி மாரி – மிக்க பல அம்பு மழைகளை. பறிய நூறி – பறிக் கப்படுமாறு அழித்து. விளிந்திலாதேன் – செத்துப்போகாத நான்.]

நண்பனாகிய சுக்கிரீவனுக்கு ஆபத்து நேராதபடி பாதுகாப்பதே தன் கடமை என்கிறான். 'உன்னைக்கொன்ற ராவ

ணனை நான் கொன்று வெற்றி பெற்றாலும் அந்த வெற்றியும் தோல்வியே!' என்கிறான்.

அத்தகைய வெற்றியைக் காட்டிலும் நண்பனுக்காக உயிர் விடுவதே மேல்; இதுதான் சிநேக தர்மம் என்பது ராமன் குறிப்பு.

பொறுமையே வலிமை

இந்த நண்பனிடம் ராமன், 'அப்படிப் பொறுமையை இழந்திருக்கக் கூடாது' என்று கண்டிப்பாகச் சொல்லுகிறான்:

பெருமையும், வன்மை
 தானும், பேரெழில்
 ஆண்மை தானும்,

ஒருமையின் உணர
 நோக்கின், பொறையின(து)
 ஊற்றம் அன்றே?

அருமையும் அடர்ந்து
 நின்ற பழியையும்
 அயர்ந்தாய் போலும்;

இருமையும் கெடுத்தாய்
 அன்றே! என் நினைந்(து)
 என்செய் தாய்நீ?

[பேரெழில் ஆண்மை-மிக்க மன எழுச்சியை உண்டாக்குகின்ற வீரம். ஒருமையின்-மன ஒருமையோடு. உணர நோக்கின்-உணர்ந்து நோக்குவோமாயின், பொறையினது ஊற்றம் அன்றே-பொறுமையின் வலிமையல்லவா. அடர்ந்து-நெருங்கி. அயர்ந்தாய்-மறந்தாய். இருமையும்-இம்மை மறுமை என்ற இரண்டையும்.]

நட்பின் சிகரம்

இத்தகைய கண்டனமும் கொஞ்சும் குரலிலேதான். நட்புக் காதலின் சிகரமாக வருகிற வார்த்தை இது:

இந்நிலை விரைவின்
 எய்தா(து) இத்துணை
 தாழ்த்தி யாயின்,

நன்னுதற் சீதை
 யால்என்? ஞாலத்தால்
 பயன்என்? நம்பி!

உன்னையான் தொடர்வல்;
 என்னைத் தொடரும் இவ்
 உலகம் என்றால்

பின்னைஎன் இதனைக்
 கொண்டு? விளையாடிப்
 பிழைப்ப செய்தாய்!

[இந்நிலை-இந்த நிலைமையில். இததணை தாழ்த்தியாயின்-இப்போது நான் பசுகிறேனே இவ்வளவு நேரம் தாமதித்



திருப்பாயானால்; நன்னுதல் சீதையால் என் – அழகிய நெற்றியுடைய சீதையால் தான் எனக்கு என்ன பயன். நம்பி – (இங்கே) நம்பிக்கைக்கு உரிய நண்பனே. உன்னை யான் தொடர்வல் – இறந்த உன்னை நான் பின் தொடர்வேன். என்னைத் தொடரும் இவ்வுலகம் – நான் இறந்தால் இவ்வுலகமும் என்னைத் தொடர்ந்து இறந்து போகும். என்றால் – ஆயின். பின்னை – பின்னே. என் – என்ன. வினையாடிப் பிழைப்ப செய்தாய் – வினையாடிய வண்ணம் பிழையான செயலைச் செய்தவனானாய்.]

சுக்ரீவனுக்குத் தீங்கு நேர்ந்திருந்தால், தனக்கும் தன்னைப் பின்பற்றுவோருக்கும் அழிவு நேர்ந்து விடும் என்கிறான் ராமன். இத்தகைய அனர்த்த பரம்பரை ஏற்படக் கூடிய நிலைமை வரும் என்று தெரிந்திருந்தும், விளையாட்டுத் தனமாகச் சுக்ரீவன் நடந்து கொண்டு மனம் பதைக்க வைத்து விட்டானே என்கிறான்.

* * *

ராவணனோடு சண்டை செய்ததில் சுக்ரீவனுக்குக் கிடைத்த அடிகளும் எமனது நெஞ்சிலேயே விழுவது போலக் காட்டும் முறையில் அமைந்திருக்கின்றன ராமனது துயரத்தை வெளியிடும் இப் பாடல்கள். இத்தகைய நட்புக் காதல் இவர்களுக்கிடையே வளர்ந்து வந்திருக்க வேண்டுமல்லவா!

குத்துச் சண்டையில் ஈடுபட்டவர்களின் உடம்பும் உள்ளமும் முறுகிக் கிடந்த அளவிற்கு, இங்கே சுக்ரீவனை வரக்காணாத நிலையில் ராமனுள்ளமும் உடம்பும முறுக்கேறப் பெற்றிருந்தன என்று கருதலாம். கண்ட பின்பே, இந்த முறுக்கானது தளர, ராமன் தன் இயல்பு நிலை-எய்துகிறான்.

ராமனுடைய மனநிலையை இப்படி விவரித்துக் காட்டும் கவிஞன், மற்றையோர் மனநிலையை உய்த்துணர வைத்து விடுகிறான்,

> எழுபது வெள்ளம்
> யாக்கைக்(கு) ஒருயிர்
> எய்திற் றன்றே

என்ற வாக்கியத்திலே.

வானரப் படையில் ஒரு சாதாரணக் குட்டிக் குரங்கும் மகாராஜாவுக்காகத் துடித்துக் கண்ணீர் வடித்தது போலத் தோன்றுகிறது. கவிஞன் காண்கிறான் இத்தகைய சிறு காட்சியையும்; சொல்லாமல் சொல்லியும் வைக்கிறான்.

இந்நிலையில் லட்சுமணனுடைய மனநிலையையும் உய்த்துணர்ந்து கொள்ளலாம் அல்லவா! எனினும் லட்சுமணனைக் கூட்டத்திலிருந்து பிரித்துக் காட்டுவது போல்,

> தூயவர் இருவ
> ரோடும்

என்று ராமனோடு சேர்த்துப் பேசுகிறான் கவிஞன்.

ராமனுடைய துயரங்களிலெல்லாம் பங்கு கொள்பவன், இந்தத் துயரத்தையும் பகிர்ந்து கொண்டானென்பது குறிப்பு.

ராவணனை விபீஷணன் சுட்டிக் காட்டியதும் சுக்ரீவன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தானல்லவா! அப்போது லட்சுமணன் சுக்ரீவனுடைய கையைத் தன் கையினால் பிடித்துக்கொண்டிருந்தான்.

> கைஅ வன்தொட
> அமைந்த கரத்தான்

என்று சாரணன் ராவணனுக்குச் சுட்டிக் காட்டினானல்லவா!

அக்கையைப் பறித்துக்கொண்டுதானே சுக்ரீவன் கிளம்பி யிருக்க வேண்டும்?

அந்த அதிர்ச்சி லட்சுமணனுக்கு இருந்தது. அப்படியே திகைத்து நின்றவன் அண்ணனுடைய துயரத்தைக் கண்டு தானும் துயரத்தில் மூழ்கிக் கிடந்தான் என்பது பொருத்தம்தானே!

எல்லாருடைய துயரங்களையும் ஒன்றுகத் திரட்டி ஒரு குரல் கொடுத்து வைத்திருப்பது போல் அமைந்திருக்கிறது ராமன் சுக்ரீவனை நோக்கிக் கண்டித்தும் கொஞ்சியும் பேசுவது.

* * *

தனக்கு ஏதோ ஆபத்து வந்து விடுமோ என்று ராமன் கவலைப்பட்டுப் பேசியது சுக்ரீவனுள்ளத்தில் எத்தகைய உணர்ச்சிகளை உண்டாக்கி யிருக்க வேண்டும்! இனிமேலாவது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதுபோல் எச்சரிக்கை செய்ததைத்தான் சுக்ரீவன் கவனித்துப் பயன் படுத்திக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து விட்டானு!

சித்திர ராமாயணம்

பி.ஸ்ரீ.

68. நட்பின் முடிமணிகள்

ராமனுடைய ஒவ்வொரு வார்த்தையிலும் நட்புக் காதல் தொனித்தது. இத்தகைய நண்பனுக்காக உயிரையும் கொடுத்திருக்கலாமே என்ற எண்ணம் சுக்கிரீவனுக்கு இப்போது.

தன்னைக் கண்டதும் எத்தகைய தளர்ச்சியிலிருந்து உவகை எழுந்தது, வளர்ந்தது! 'இவ்வளவு காதலுக்கு நான் தகுதியுள்ளவனு!'—சோதனை ஒளி இதயப் பிரதேசமெங்கும் சோதித்துப் பார்க்கிறது.

தன்னைப் பிரிந்திருந்த ராமன் கண்களில் அந்த அழுகையைக் கண்டதும் சுக்கிரீவனுள்ளம் என்ன பாடு பட்டிருக்க வேணும்! இந்த நிலைமையை எதிர்பார்த்திருக்க முடியுமா!

நண்பனுக்காக ஏதாவது பிரமாதமாய் ஒரு காரியத்தைச் செய்துவிடவேண்டும் என்ற ஒரே வெறியில் போய்க் குதித்தவன் தான். பிறகு குத்துப் போர் வெறியிலே, தன்னுடைய பிரிவு ராமனுக்கு எவ்வளவு துயரம் விளைத்திருக்கும் என்பதைச் சற்றும் சிந்தித்துப் பார்க்கவில்லை.

சுக்கிரீவன் மகுட மணிகளைப் பறித்துக்கொண்டு வந்தபோது ராவணன், 'செத்துப் போயிருந்தால் நலமாயிருக்குமே!' என்ற மன நிலையில் இருந்தான். ராமன் முதலானவர்களோ உயிர் பிரிந்த உடம்பிலே அந்த உயிர் மறுபடியும் வந்து விட்டது போன்ற மன நிலையில் இருக்கிறார்கள்.

'இத்தகைய ராமனுக்கு நாம் செய்ததெல்லாம் போதாது' என்ற மனநிலை தான் சுக்கிரீவனுக்கு. ராவணனுடைய முடி மணிகளைப் பறித்து வந்ததும் வெட்கப்படுவதற்கே காரணமாகிவிடுகிறது.

முடி மணிகளை அடித்தலத்தில் சூட்டி, 'இவ்வளவு அற்பமான காரியத்தைத் தானே செய்ய முடிந்திருக்கிறது!' என்று தொழுகிறான். ராமனை நோக்குவதற்கும் வெட்கப் படுகிறான்:

> தொழு(து) அயல் நாணி
> நின்றான்.

இந்த வாக்கிற்கே, சிங்கம் கழுத்தைத் தாழ்த்திக்கொண்டு நிலம் நோக்கி நின்றதுபோல் நின்றான் சுக்கிரீவன் என்று விரிவுரை செய்து கொள்ளலாம். இக்கருத்தை வெளிப்படையாக வெளியிடும் பாட்டொன்று இடைச் சொருகலாகச் சேர்க்கப் பட்டிருக்கிறது.

மணி மொழிகள்

இப்படி நாணி நின்ற நண்பனை ராமன் தழுவிக்கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றான்; கொஞ்சும் குரலில் சுக்கிரீவனுடைய ஆக்கிரத்தைக் கண்டிக்கிறான், 'என்ன விளையாட்டுப் புத்தி உனக்கு!' என்றும் இடித்துரைக்கிறான்.

'நண்பனாகிய உனக்குத் தீங்கு நேருமானால், சீதையால் தான் எனக்கு ஏது பயன்! இந்த உலகத்தால்தான் பயன் என்ன!' என்பது போன்ற அன்புரைகளுக்கிடையே 'நான் உனக்காக உயிரை விட்டிருப்பேனே!' என்பதை ராமன் தெளிவு படுத்தினானல்லவா!

உடனே சீதைக்காக உயிர்கொடுத்த ஜடாயுவின் நினைவு வருகிறது சுக்கிரீவனுக்கு.

தன் பேச்சினிடையே ராமன்

> என் நினைந்(து) என்செய்
> தாய் நீ?

என்று கேட்டான் அல்லவா!

இப்போது சுக்கிரீவன் பதில் சொல்லுகிறான்:

காட்டிலே கழுகின்
வேந்தன் செய்தது
காட்ட மாட்டேன்;

நாட்டிலே குகனார்
செய்த நன்மையை
நயக்க மாட்டேன்;

கேட்டிலேன் அல்லேன்;
இன்று கண்டும்அக்
கிளிஅன் னானை

மீட்டிலேன்; தலைகள்
பத்தும் கொணர்ந்திலேன்;
வெறும்கை வந்தேன்!

[கழுகின் வேந்தன் ஜடாயு. நயக்க மாட்டேன்—விரும்பிச் செய்ய வல்லமையற்றவனாகி விட்டேன். கேட்டிலேன் அல்லேன் – நான் அவர்களுடைய செயல்களைக் கேளாதவன் அல்லேன்; அதாவது, கேட்டேயிருக்கிறேன். இன்று கண்டும் அக் கிளியன்னானை மீட்டிலேன்–இன்று கிளிபோன்ற சீதையைக் கண்டு சிறை மீட்டுக் கொண்டுவர வேண்டியிருக்க, அதுவும் செய்யாதவனாகி விட்டேன்.]

சுக்கிரீவனுக்கு லட்சிய புருஷர்களாயிருக்கிறார்கள் ஜடாயுவும் குகனும். 'வாழ்ந்தால் குகனைப் போல் வாழ வேணும்; செத்தால் ஜடாயுவைப் போல் சாக வேணும்' என்கிறான் சுக்கிரீவன்.

பக்தியினால் ராமனுக்காக உயிர் கொடுக்கும் நிலையில் குகன் இருந்தான் என்பது 'அயோத்தியா காண்ட'த்தில் கவிக்கூற்று. 'உனக்கும் எதிரிகள் இருக்கக் கூடுமானால், ராமா! உனக்கு முன்னே உயிரைக் கொடுப்பதற்காக நான் உன்னுடன் வருவேன்!' என்பது குகன் வாக்கு.


ஆனால் உயிர்த் தியாகம் ஜடாயுவுக்கே உரிய பேறாகக் கிடைத்தது. ராமனுக்காக உயிரை வைத்துக் கொண்டிருப்பதே குகன் செய்துவரும் தியாகமாகும்.

இந்தக் குகனை ராமன் ஐந்தாவது சகோதரனாக அங்கீகரித்தான். சுக்கிரீவன் ஆறாவது சகோதரனாக அங்கீகரிக்கப் பட்டவன். இந்த நிலையில்,

நாட்டிலே குகனார்
செய்த நன்மையை
நயக்க மாட்டேன்

என்ற சுக்கிரீவன் வாக்கிற்கு 'அந்தக் கழுகுப் பெரியப்பாவின் தியாக உணர்வும் எனக்கு இல்லை; என் தமையனான குகனது தியாக புத்தியும் வாய்க்கப் பெற்றேனில்லையே!' என்று சுக்கிரீவன் தற்சோதனை செய்துகொண்டு பேசுவதாகப் பொருள் கொள்ளலாம்.

உண்மையில், சுக்கிரீவன் மனப் போக்கைக் குகனது மனப் போக்குடனும் ஒப்பிட முடியாது; ஜடாயுவின் மனப் பான்மையுடனும் ஒப்பிட முடியாது.



ஜடாயுவைப் போல் பிராணத் தியாகம் செய்யவும் இவன் சித்தமாக இல்லை, ராம கைங்கரியத்திற்காக உயிரை வைத்துக்கொண்டிருக்க வேணும் என்ற ஆசையால். குகனைப்போல் ராமனை நினைத்துக்கொண்டே பிரிந்திருப்பதும் இவனுக்கு இயலாத காரியம்தான். 'தலைகள் பத்தும் கொணர்ந்திலேன்; வெறுங்கை வந்தேன்!' என்பதன்றோ சுக்கிரீவன் நிலை!

வெற்றி பெற வேண்டும்; ராமனுக்காக வெற்றிபெற வேண்டும், ராமனுடைய வெற்றியை இயலுமானால் அவனுக்கு முன்பே தான் பெற்றுவிட வேண்டும்: இது சுக்கிரீவன் மனப்போக்கு.

ராமன் வாலியை ஒழித்துச் சுக்கிரீவனுக்கு வாழ்வும் ராஜ்யமும் கொடுத்தானல்லவா! தானும் ராமனுடைய பகைவனான ராவணனை ஒழித்துப் பிராட்டியைச் சிறை மீட்டுக் கொடுப்பதே தக்க முறையில் நன்றி தெரிவிப்பதாகும் என்பது சுக்கிரீவன் நினைவு.

'அப்படி ஒன்றும் செய்யக் கூடிய ஆற்றல் பெற்றிருக்க வில்லையே' என்று கதறுகிறது இந்த உள்ளம்;



வன்பகை நிற்க,
எங்கள் வானரத்
தொழிலுக் கேற்ற

புன்பகை காட்டும்
யான் ஓர் புகழ்ப்பகைக்(கு)
ஒருவன போலாம்!

என்பகை தீர்த்(து) என்
ஆவி அரசொடும்
எனக்குத் தந்த

உன் பகை உனக்குத்
தந்தேன்; உயிர் சுமந்(து)
உழலா நின்றேன்.

[வன்பகை – வலிய பகை. ஓர் புகழ்ப் பகைக்கு ஒருவன் போலாம்—உமது ஒப்பற்ற புகழ்ப் பகையாவதற்கு ஏற்ற ஒருவன் போல இருக்கிறேன். உழலா நின்றேன்—உழன்று கொண்டிருக்கிறேன்.]

எதிரியைக் கண்டதும் தாவிப் பாய்ந்து போரிட்டுத் திரும்பி ஓடி வந்து விட்ட தியாக புத்தியையும் காட்டவில்லை, வீர உணர்வையும் வெளியிடவில்லை, குரங்குப் புத்தியைத்தான் காட்டுகிறது என்கிறான் சுக்கிரீவன். தன்னுடைய இந்தச் செய்கை தனக்கு வீரப் புகழ் தரவில்லையென்பது மட்டுமல்ல, ராமனுடைய வீரப் புகழுக்கும் குறைவை விளைவித்து விட்டது என்று பிரலாபிக்கிறான்.

அந்தக் குத்துப் போரிலே ராவணன் மேல் விழுந்த குத்துக்களும் அவ்வளவு பலமாக விழவில்லையோ என்று இப்போது கலங்குகிறது சுக்கிரீவனுடைய நெஞ்சு:

செப்புக்கும் சிவந்த
செங்கண் திசைநிலைக்
களிற்றின் சீற்றக்!

கொம்புக்கும் குறைந்த
துண்டே என்னுடைக்
குரக்குப் புன்தோள்!

[செப்புக்கும் சிவந்த—செம்பைக் காட்டிலும் சிவந்த. திசை நிலைக்களிற்றின்—திசை யானைகளின். சீற்றக் கொம்புக்கும்—சீற்றத்தோடு பாய்ந்த தந்தங்களுக்கும். குறைந்த துண்டே – குறைந்ததாயிற்றே குரக்குப் புன்தோள்—அற்பமான குரங்கின் தோள்.]

'நான் போன நோக்கம் என்ன! செய்த காரியம் என்ன!' என்று எண்ண

மிட்டுத் தான் செய்ததையும், செய்ய எண்ணியதையும் முரண்படத் தொடுத்துப் பார்க்கிறது மனோபாவம். 'அவனைக் குத்தி ஹிம்ஸித்துப் பிராட்டியை விடுவிக்க எண்ணிய நான், அந்தக் குத்துப் போரையும் சரியாக நடத்தவில்லையே!' என்கிறான்.

விபீஷணன் ராவணனைக் காட்டியதும் சுக்கிரீவன் அம்புபோலப் பறந்து போனானல்லவா! இப்போதோ கொதிக்கிறது அந்த நெஞ்சு,

அம்புக்கு முன்னம்
சென்(று) உன் அரும்பகை
முடிப்பல் என்று
வெம்புற்ற மனமும்
யானும் தீதின்றி
மீள வந்தேன்!

[வெம்புற்ற—வெப்புதல் அடைந்த.]

'ராம பாணத்திற்கு முன்னே போய் அது செய்ய வேண்டிய காரியத்தை நான் செய்ய வேண்டுமென்று மனப்பால் குடித்தேனே!' என்று தான் புறப்படும்போது கொண்டிருந்த அந்தக் கனவையும் அப்படியே சொல்லிக் காட்டுகிறான்.

'அந்த மனமும் நானும் அப்படியே க்ஷேமமாகத் திரும்பி வந்து விட்டோமே!' என்ற வார்த்தையில் சுக்கிரீவனது இதயத் துடிப்பை அப்படியே கண்டு கொள்கிறோம்.

சுக்கிரீவனும் அனுமனும்

தன்னந்தனியனாக அனுமன் போய் இலங்கையில் புரிந்த சாகசங்களெல்லாம் படுவேகத்தில் ஓடுகின்றன மனக் கண் முன்பு. அவனுக்கு எந்தப் பலம் எப்படித் துணை செய்தது! எவ்வளவு அநாயாசமாக என்ன என்ன செய்து விட்டான் இலங்கையிலே!

'அனுமனுடைய வீரம் எங்கே, அறிவுத்திறன் எங்கே! நாம் எங்கே!' என்று கேட்கிறது சுக்கிரீவனுடைய நெஞ்சு. தன்னுடைய பெருமை பெற்ற அமைச்சன்தான், பணியாளன்தான்; ஆனால் இப்போது அப்படி அவனைக் குறிப்பிட உள்ளம் இடம் கொடுக்கவில்லை.

'ராம தூதன்,' 'ராமனுடைய பெருந் தூதன்' என்றே அனுமனைச் சிறப்பிக்க விரும்புகிறான். ராமனுடைய பெருமைக்கு, வீரப் புகழுக்கு இசைந்த பேராண்மைப் பெருஞ் செயல்களைச் செய்தவனல்லவா!

சுந்தர காண்டத்திற்கு ஒரு கதாநாயகனாக வீரம் விளைத்து அநாயாசமாக வெற்றி பெற்று வந்த அனுமனையும் தன்னையும் எப்படி முரண்பட வைத்து நோக்குகிறது சுக்கிரீவ மனோபாவம்:

நூல்வலி காட்டும்
சிந்தை நும்பெருந்
தூதன், வெம்போர்
வேல்வலி காட்டி
னார்க்கும், வில்வலி
காட்டி னார்க்கும்,
வால்வலி காட்டிப்
போந்த வளநகர்
புக்கு, மற்(று)என்
கால்வலி காட்டிப்
போந்தேன் கைவலிக்(கு)
அவதி உண்டோ?

[நூல்வலி காட்டும் சிந்தை—நூலாராய்ச்சியின் திறமையைக் காட்ட வல்ல சிந்தை. வெம்போர்—கொடிய போரில். வால் வலி—வாலின் வலிமை. காட்டிப்போந்த—காட்டி வந்த. வளநகர் புக்கு—வளமுள்ள நகரமாகிய இலங்கையில் புகுந்து. அவதி—எல்லை.]

'அனுமன் வால் வலிமை காட்டி வந்த அதே வளநகரில், நான் கால் வலிமை காட்டி ஓடி இங்கே வந்து சேர்ந்து விட்டேனே!' என்று சுக்கிரீவன் எவ்வளவு தூரம் தன்னைத் தாழ்த்திக் கொண்டு பேசுகிறான்!

இந்தப் பெரும் பணிவிலேயே 'மகாராஜா'வாக உயர்ந்து விடுகிறான் என்பது கவியுள்ளம்:

இன்னன பலவும்
பன்னி இறைஞ்சிய
முடிய னாகி
மன்னவர் மன்னன்
முன்னர் வானர
மன்னன் நிற்ப......

* * *

ராவணனுடைய முடிமணிகளை ராமன் அடித்தலத்தில் காண்கிறோம் இப்போது. வாக்கின் முடிமணிகளை இரு நண்பர் வாயிலாகக் கேட்கிறோம், செவி படைத்த பயனாக, செவி செய்த தவமாக.

ஸ்ரீ ராமாயணம்

பி. ஸ்ரீ.

69. சுக்கிரீவனுக்கு நீதி

சுக்கிரீவனைக் குறித்து அவன் குத்துச் சண்டையில் ஈடுபட்டிருந்தபோது ராமன் கவலை கொண்டு மனம் புழுங்கிக் கதறியதாகக் கவிஞன் காட்டுவதிலிருந்து இந்த இருவரிடையே நட்புக் காதல் எப்படி விளங்குகிறது என்பதைத் தெரிந்து கொண்டோம். ஆனால் ராமனது இப் பெருங் கவலையிலிருந்தே சுக்கிரீவனுக்கு அவ்வளவு போர்த் திறமை இல்லையென்று ஊகிக்கவும் கூடுமல்லவா!

திடீரென்று கிளம்பிப் போனவன் திரும்பி வருவதற்குச் சற்றுத் தாமதமானதும் ராமன் உணர்வழிந்து சிந்தை ஒடுங்கித் தளர்ந்து போவதற்குக் காரணம் என்ன! ராவணன் கையில் வலியப் போய் மாட்டிக் கொண்டவன் தப்புவது அரிது என்றே ராமன் கருதினான். ராவணன் சுக்கிரீவனைக் கொல்லவும் கூடும் என்ற எண்ணமும் ராமனுக்கு ஏற்பட்டதல்லவா!

தன் அடித்தலத்திலே கொண்டுவந்து குட்டிய அந்த மணிகளைக் கண்டபின்பும் அச் செயல் குறித்து, அவனைப் பாராட்டாது ராமன். 'அன்பன் தப்பிப் பிழைத்து வந்து விட்டானே!' என்றல்லவோ ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றான்!

இரத்தினங்களோடு வந்திருக்கும் சுக்கிரீவனைக் குத்துச் சண்டையில் வெற்றி பெற்று வந்திருக்கிறான் என்று ராமன் எண்ணவில்லையே! 'நின்னை அக் கருணையில்லோன் கொல்லுதல் செய்தானாயின்' என்று தானே இந் நிலையிலும் மனம் வருந்திப் பேசினான்! 'விளையாடிப் பிழைப்ப செய்தாய்!' என்று தானே கூறி முடித்தான்!

ராவணனுடைய முடிமணிகளைப் பறித்துக் கொண்டு, முதற் போரில் ராமன் மகுடபங்கம் செய்வதற்கு முன்பே ராவணனை மகுடபங்கம் செய்து வந்திருக்கும் சுக்கிரீவ சாகஸத்திற்கு நீதி செலுத்தவில்லை ராமனது அன்புரை என்பது தெளிவு.

இந்த நிலையில் சுக்கிரீவனும் தனக்கு நீதி தேடிக் கொள்ளவில்லை என்பதையும் நாம் அறிவோம். ராவணனது முடிமணிகளோடு வந்திருந்தும்,

வெறும்கை வந்தேன்!

என்று தானே சொல்லிக் கொண்டான்! இந்த முடிமணிகளை அந்த முடிக் தலைகளோடு பறித்துக் கொண்டு வந்தேனில்லையே!—இப்படியல்லவா அலறியது சுக்கிரீவனுள்ளம்!

'என்புறக் கிழிந்த' புண்ணும் குருதியும் சொன்ன வீர சாகஸக் கதையை ராமனும் கவனிக்கவில்லை; சுக்கிரீவனும் பொருட்படுத்தவில்லை.

வெம்புற்ற மனமும்
யானும் தீதின்றி
மீள வந்தேன்!

என்று தானே, ராவணனுடைய குத்துகளுக்குப் பயந்து வந்து விட்டதுபோல், பேசினான்.

தன்னுடைய அமைச்சனும் பணியாளனுமாகிய அனுமன் வாலவலி காட்டிய நகரத்திலிருந்து கால்வலி காட்டி ஓடி வந்து விட்டதாக அல்லவா மகாராஜா, அந்த அனுமன் முன்பும், தன்னுடைய சாதாரண வானரப் படை வீரர் முன்பும் தனது பலவீனத்தை — ஆற்றாமையை— விளம்பரப் படுத்திக் கொண்டான்!

* * *

உண்மையில், இந்தத் தனிப் பெரும் பணிவு சுக்கிரீவனுடைய திறமைக்கு முடி சூட்டுகிறது!

இன்னன பலவும்
பன்னி இறைஞ்சிய
முடிய ளுகி

என்று அந்தப் பணிவைக் காட்டும் போதே கவிஞன்,

'வாழி அவனை
வணங்கும் முடிச்சென்னி'

என்பது போல் அந்த வணங்கிய தலைக்கு முடி சூட்டி வைக்கிறான்.

சுக்கிரீவனது அதிசயப் பணிவு குத்துச் சண்டையில் இவன் காட்டிய அதிசயத் திறனுக்கு எதத்கைய மாட்சி தந்து, இவனை ராமனுக்கு இசைந்த, உகந்த, தோழனுக்கிக் காட்டுகிறது! இதுதான் தொனிப்பொருள்,

மன்னவர் மன்னன்
முன்னர் வானர
மன்னவன் நிற்ப

என்ற கவிதை–மகா வாக்கியத்திற்கு.

*　　*　　*

எனினும் சுக்கிரீவ குணசித்திரம் நிறம் பெறுவதற்கு, நிறைவு பெறுவதற்கு, வேறொரு உபாயமும் கையாளப் படுவது அவசியமாகும்.

அன்னவன் தன்னை
நோக்கி, அழகனை
நோக்கி, ஆழி

மின்னென விளங்கும்
பைம்பூண் விடணன்
விளம்ப லுற்ருன்

[அன்னவன் தன்னை – அந்தச் சுக்கிரீவனை. அழகனை–ராமனை. ஆழி–மோதிரம். மின்னென – மின்னல் போல்.]

என்று விபீஷணன் வாயிலாகச் சுக்கிரீவனுக்கு நீதி செலுத்துகிருன் கவிஞன்.

சுக்கிரீவன் பறித்துக்கொண்டு வந்த மணிகளின் அருமை பெருமைகளை விபீஷணன் பாராட்டித் தெரிவிக்கும் வரை, ராமனே பிறரோ அந்த விஷயமாகச் சிந்தனை செய்யவுமில்லை; சிந்தித்துப் பார்ப்பதற்கு அவகாசமும் இல்லை. ராமனுடைய நட்புக் காதலே சுக்கிரீவனை 'நாம் என் செய்து விட்டோம்! செயற்கருஞ் செயலொன்றும் செய்யவில்லையே!' என்ற ஆருத் துயரத்திலும் ஆழ்த்தி விடுகிறது.

இந்நிலையில் சுக்கிரீவனுடைய மனநோய்க்கு மருத்துவம் இதோ நடக்கிறது:

வாங்கிய மணிகள்,
அன்னுன் தலைமிசை
மௌலி மேலே

ஓங்கிய அல்ல
வோ? மற்(று) இனிஅப்பால்
உயர்ந்த துண்டோ?

திங்கவன் சிரத்தின்
மேலும் உயிரினும்
சிரி தம்மா;

வீங்கிய புகழை
யெல்லாம் வேரொடும்
வாங்கி விட்டாய்!

[வாங்கிய–பறித்துக்கொண்ட மௌலி–கிரீடம். திங்கு அவன் – தீங்கையுடைய ராவணன். சிரத்தின் மேலும் – சிரங்களைக் காட்டிலும் சிரிது – சிறப்புள்ள அவை. வீங்கிய – மிக்க.]

'தலைகள் பத்தும் கொணர்ந்திலேன்' என்று சுக்கிரீவன் குறைப்பட்டானல்லவா? அதற்குப் பதில் சொல்வதுதான்,

திங்கவன் சிரத்தின்
மேலும் உயிரினும்
சிரி தம்மா!

என்று விபீஷணன் கூறுவது. உயிரை வாங்கி விட்டால், ராவணன் பரிபவப் பட்டு வருந்துவதற்கு இடம் எங்கே?

எப்பேர்ப்பட்ட பராக்கிரமசாலியை எப்படிப் பரிபவப்படுத்தி விட்டான் சுக்கிரீவன்! நமது பூமியை ஆயிரந்தலைப் பாம்பு சுமப்பதாகப் புராணம் கற்பனை செய்து பேசுகிறதல்லவா? அந்த ஆதிசேஷனுடைய பணமணிகளாகிய நாக ரத்தினங்களைப் பறிக்கவும் வல்லவன் ராவணன் என்கிருன் விபீஷணன். இதற்காக ராவணன் சிரமப்பட வேண்டுமா? தன் காலினலேயே நிலத்தைத் தோண்டி அந்தப் பணமணிகளையும் பறித்துக் கொள்வது சாத்தியமாம் ராவணனுக்கு!

அத்தகைய ராவணனது முடிமணிகளைப் பறித்துக் கொண்டு வந்த வீரம் சாமானியமா?

பாரகம் சுமந்த
பாம்பின் பணமணி
பறிக்க வேண்டின்,

வார்கழற் காலி
னலே கல்லவல்
லவனை முன்னுத்,

தார்கெழு மௌலி
பத்தின் தனிமணி
வலிதில் தந்த

வீரதை விடைவ
லோற்கும் முடியுமோ?
வேறு முண்டோ?

[பாரகம் – பூமி. பணமணி – பாம்பின் படத்திலுள்ள இரத்தினம். வார்கழல் – நீண்ட வீரக் கழல். கல்ல – தோண்ட. தார்கெழு – மாலை அணிந்த. மௌலி – கிரீடம். தனிமணி–ஒப்பற்ற ரத்தினங்கள். வலிதில் தந்த – வலிமையுடன் பறித்துக் கொண்டு வந்து கொடுத்த. வீரதை – வீரத் தன்மை. விடைவலோற்கும் – சிவபெருமானுக்கும்.]

என்று கூறி விபீஷணன் சுக்கிரீவனுடைய செயல் செயற் கருஞ் செயல் தான் என்பதை வற்புறுத்துகிறான்.

மேலும் சுக்கிரீவ பராக்கிரமத்தை வலியுறுத்திப் பேச விரும்பி, ராவணனைச் சுக்கிரீவன் வென்று விட்டதாகவே அபிப்பிராயப்படுகிறான் :


கருமணி கண்டத்
தான் தன் சென்னியிற்
கறைவெண் திங்கள்

பருமணி வண்ணன்
மார்பிற் செம்மணி
பறித்திட் டாலும்

தருமணி இமைக்கும்
தோளாய்! தசமுகன்
முடியில் தைத்த

திருமணி பறித்துத்
தந்த வென்றியே
சிறி தன்றோ!

[கருமணி கண்டத்தான் – நீலமணி போன்ற கண்டத்தையுடைய சிவபெருமான். சென்னி – தலை. கறைவெண் திங்கள் – களங்கத்துடன் வளரக்கூடிய வெள்ளிய சந்திரன்; அல்லது ஒற்றைக் கலைப் பிறை பருமணி வண்ணன் – பெருமை பெற்ற மணி வண்ணனாகிய திருமால். செம்மணி- சிவந்த கௌஸ்துப மணி. தருமணி இமைக்கும் தோளாய் – பறித்துக்கொண்டு வந்த மணிகளாலே விளங்குகின்ற தோள், வலிமையுள்ளசுக்கிரீவனே. இமைக்கும் – மின் வெட்டும். தசமுகன் - ராவணன்.



முடியில் தைத்த – முடியில் பதித்த. சிரிது – இதுவே சிறப்புடையது.]

நீலகண்ட மூர்த்தி சென்னியில் அணிந்த பிறைச் சந்திரனைப் பறிக்கலாம்; நீல மணிவண்ணன் மார்பில் அணிந்த செம் மணியையும் பறித்துக் கொள்ளலாம்; ஆனால் ராவணனுடைய முடியில் பதித்த மணிகளைப் பறித்துக் கொண்டு வருவது எவருக்கும் இயலாததே என்கிறான் விபீஷணன்.

* * *

இப்படியெல்லாம் விபீஷணன் சுக்கிரீவனது வெற்றியைக் கொண்டாடிய பின் ராமனும் அன்பு கூர்ந்த, கருணை கூர்ந்து 'இன்று நிகழ்ந்த இது வெற்றியே' என்று சொல்லுகிறான் :

'இன்றிது வென்றி'
என்றென்(று) இராமனும்
இரங்கிச் சொன்னான்.

'இது வெற்றி தான்; இந்தச் சுக்கிரீவன் அடைந்தது வெற்றி தான்' என்று ராமனும் பன்முறை சொல்லுகிறானும். ஆபத்திற்கு இடமான ஒரு காரியத்தில் தலையிட்டுக் கொண்டான்; ஆழம் தெரியாமல் காலைவிட்டான் என்று பொருள்படக் கவன்று கண்டித்துப் பேசிய ராமன் விபீஷணன் பேச்சைக் கேட்ட பின்பு சுக்கிரீவ பராக்கிரமத்திற்குத் தானும் நீதி செலுத்துகிறான்.

* * *

சூரியாஸ்தமனம் ஆகிறது, ராவணனும் தன் இருப்பிடத்திற்குப் போகிறான்; ராமனும் தன் இருப்பிடம் சேர்கிறான், இந்தக் கட்டத்தை முடிக்கிறான் கவிஞன்.

ராமன் இருக்கை சேர்வது பின்வருமாறு வருணிக்கப்படுகிறது :

கங்குல்வந் திறுத்த
காலை, கைவிளக்(கு)
எடுப்ப தென்ன
வெங்கழல் அரக்கன்
மௌலி மிசைமணி
விளக்கம் செய்யச்,
செங்கதிர்ச் செல்வன்
செய்த வென்றியை
நிறையத் தேக்கிப்
பொங்கிய தோளி
னானும் இழிந்து போய்
இருக்கை புக்கான்

[கங்குல்–இரவு. வந்து இறுத்த காலை–வந்து கவிந்த போது. வெங்கழல் அரக்கன் – கொடுமைக்கு அறிகுறியான வீரக் கழல் அணிந்த ராவணன். மௌலி மிசை மணி – கிரீட ரத்தினங்கள். விளக்கம் செய்ய – வேறு விளக்கு அவசியமில்லை யென்பதுபோல் ஒளி செய்ய. செங்கதிர்ச் செல்வன் – செந்நிறக் கிரணங்களை யுடைய சூரியனது செல்வக் குமாரனை சுக்கிரீவன். இழிந்து போய் – இறங்கிப் போய். இருக்கை புக்கான் – இருப்பிடத்திற்குப் போனான்.]

தன்னுடைய வெற்றிக்கே அஸ்திவாரம் போட்டதுபோல் சுக்கிரீவன் விளைத்திருக்கும் வெற்றியைத் தன் உள்ளத்தில் நிறைததுக் கொள்கிறானும் ராமன். அது நிறைந்து பொங்கவே ராமனது வீரத் தோள்கள் பூரிக்கின்றன. இத்தகைய பூரிப்புடன் ராமன் இருப்பிடம் சேர்கிறான், சுவேலமலையினின்றும் இறங்கி.

ராவணனும் தான் இருந்த குன்றம் போன்ற கோபுரத்திலிருந்து இறங்கித் தன் இருப்பிடத்திற்குப் போகிறான். ஆனால் இவனுடைய மனநிலை இப்போது எப்படி இருக்கிறது?

என்றானும் இனைய
தன்மை எய்தாத
இலங்கை வேந்தன்,
நின்றார்கள் தேவர்
கண்டார் என்பதோர்
நாணம் நீள,
அன்றாய மகளிர்
நோக்கம் ஆடவர்
நோக்க மாகப்
பொன்றாது பொன்றி
னான், தன் புகமென
இழிந்து போனான்.

[என்றானும் – என்றைக்கு ஆயினும், இனைய தன்மை – இவ்வாறான தன்மையை, அன்று ஆய மகளிர் நோக்கம் – அங்கே பொருந்திய பெண்களின் பார்வை. பொன்றாது பொன்றினான் –உயிர் போகாமலே செத்தவன் போன்றவனாகி. இழிந்து – இறங்கி.]

ராவணன் கோபுரத்து உச்சியிலிருந்து இறங்கியதற்கு அவனது வீரப் புகழ் சுக்கிரீவன் முடிமணி பறித்த செயலால் இறங்கி விட்டதை உபமானமாகக் காட்டுவதும், சூரியாஸ்தமனத்தை ஒட்டி ராவணனது வீர சூரியனுக்கும் அஸ்தமனக் குறி தோன்றி விட்டதாகக் காட்டுவதும், சுக்கிரீவனுக்கு நீதி செலுத்தும் இந்தக் கட்டத்திற்கு மகுட மணிகள் போல் அமைந்துள்ள கற்பனை.

சித்திர ராமாயணம்

பி. ஸ்ரீ.

70. நட்பின் ஆழமும், அகலமும்

வாலிக்கு அஞ்சி ஒளித்துக் கொண்டிருந்த சுக்கிரீவனை ராம லட்சுமணர் தேடிப் போய் நண்பனைத் தேடிக் கொண்டார்கள். ஏன்? சுக்கிரீவனைக் காட்டிலும் எவ்வளவோ பலசாலியாக இருந்த வாலியின் உதவியால் சீதையைத் தேடுவதும் ராவணவதம் செய்வதும் எவ்வளவு எளிதாக இருந்திருக்கக்கூடும்!

ஆழத்தில் அடிப்படை

ஞானம் பெற்றுக் கந்தர்வனாகி விட்ட கபந்தனும், சபரி என்ற தவப்பெண்ணும் ராமனிடம் சுக்கிரீவனுடன் நட்புரிமை கொள்ள வேண்டுமென்றே சொல்லியிருந்தார்கள். அதற்குத்தான் காரணம் என்ன?

வாலி என்றுளான்,
    வரம்பில் ஆற்றலான்

என்பது அவர்களுக்குத் தெரியாதா?

தவயோகினியாகிய சபரி ராமகாரியத்திற்கு 'வரம்பில் ஆற்றலு'ம் போதாதென்றே கருதியிருக்க வேண்டும்.

அட்டமூர்த்தி தாள்
    பணியும் ஆற்றலான்

[அட்டமூர்த்தி – சிவன்.]
என்று அநுமனால் வாலி வருணிக்கப்படுகிறான், அந்தப் பக்தி என்ற ஆற்றல்கூடப் போதாது ராமகைங்கரியத்திற்கு என்பது சபரியின் கருத்தாக இருக்கக் கூடும்.

சுக்கிரீவனுக்கு வாலி செய்த கொடுமையைக் குறிப்பிடும்போது அநுமன் சொன்னான்:

உரிமை யென்(று) இவற்(கு)
        உரிய தாரமாம்
  அருமருந்தையும்
    அவன் விரும்பினான்,
  இருமை யும்துறந்(து)
    இவன் இருந்தனன்
  கருமம் இங்கிதே
    கடவுள்! என்றனன்.

இப் பெருங் கொடுமையைத் தம்பிக்குச் செய்த வாலி, எத்தகைய பலசாலியாக இருந்தாலும் சத்திய வீரனாகிய ராமனுடைய நட்பிற்கு உரியவனல்லன் என்றே சபரி தீர்மானித்திருக்க வேண்டும்.

சபரி எதிர்பார்த்தபடியே ராமனுடைய மனநிலையும், சுக்கிரீவனுடைய மனநிலையும் ஒத்துழைக்க முடியும் என்பது தெளிவாயிற்று. சுக்கிரீவனுடைய தயாள குணமும் தரும புத்தியும் பக்தியுணர்வும் கஷ்டநிலையும் பொறுமையும் ராமனது கருணையைப் பெரிதும் தூண்டி விட்டன.

இருவரும் மனைவியரைப் பிரிந்திருந்த நிலையில் 'சம துக்கி'களாக இருந்து பிராண சிநேகிதராகி விட்டனர்:

ஈரம் நீங்கிய
  சிற்றவை சொற்றனள்
    என்ன,
ஆரம் விங்குதோள்.—
  தம்பிக்குத் தன்அர
    சுரிமைப்
பாரம் ஈந்தவன்,
  பரிவிலன் ஒருவன்,தன்
    இளையோன்
தாரம் வவ்வினன்
  என்றசொல் தரிக்குமா(று)
    உளதோ?

[சிற்றவை – சிறிய தாயான கைகேயி. தம்பிக்கு – பரதனுக்கு. பரிவிலன் ஒருவன் – இரக்கமின்மையில் ஒப்பற்றிருந்த

வாலி. வவ்வினன் - அபகரித்துக்கொண்டான். தர்க்கம் ஆறு - பொறுத்துக் கொள்ளும் விதம்]

இந்த ஆழத்திலிருந்து அடிப்படை அமைந்து உருவாகி ஓங்குகிறது இந்த நட்புக் கட்டடம். ஆகவேதான், குத்துச் சண்டையில் சுக்கிரீவன் ஈடுபட்டிருக்கும் போது ராமன் என்றதை தெல்லாம் எண்ணி நெஞ்சு புண்ணுகிறான் :

மன்னுயிர் அனைய
காதல்—துணைவனை
வரவு காணான்,

'உன்னரிய கருமம்
எல்லாம் உன்னொடும்
முடிந்த!' என்னுத்

தன்னுணர்(வு) அழிந்து
சிந்தை அலம்வந்து
தளர்ந்து சாய்ந்தான்.

வாலி இத்தகைய நட்புக் காதலின் மர்மத்தையோ தர்மத்தையோ அறிந்து கொள்ளவில்லை. அவனுக்கு ராமன் மீது ஒருவிதமான பகையும் இல்லை. ராமனைக் குறித்து நல்ல மதிப்பும் இருந்தது.

சுக்கிரீவனுக்கு ராமன் துணை செய்ய வந்திருக்கிறானென்று தன் மனைவியான தாரை எச்சரிக்கை செய்தபோதிலும், ராமனுடைய தரும உணர்வு தன்னைக் கொல்வதற்கு ஒருபோதும் இடம் கொடாதென்றே வாலி நம்பினன்.

எம்பியும் யானும்உற்(று)
எதிர்ந்த போரிடை

அம்(பு)இடை தொடுக்குமோ
அருளின் ஆழியான் ?

[அருளின் ஆழி - அருளாகிய பெருங் கடல்]

என்று சொல்லித் தாரையின் வாயை மூடிவிட்டான்.

'தம்பியரைத் தவிர வேறு உயிர் தனக்கு இல்லை என்றே கருதுபவன் ராமன்' என்று கூட வாலி கேள்விப்பட்டிருந்தான். 'அப்பேர்ப்பட்ட ராமன் நானும் தம்பியும் செய்து கொள்ளும் சகோதரச் சண்டையில் தலையிட மாட்டான' என்பது வாலியின் தருக்க வாதம்.

ஆனால் தம்பியரை உயிராகக் கொண்ட ராமன, வாலி தன் தம்பியை நாட்டை விட்டுத் துரத்தி அவன் மனைவியையும் கவர்ந்து கொண்டு அவனுயிரையும் கவர்ந்து கொள்ள நிச்சயித்திருப்பதை எப்படிப் பொறுத்திருக்க முடியும்!

வாலி தாரையை,
தருமமே தவிர்க்குமோ
தன்னைத் தானரோ!

என்று ஒரு கேள்வி போட்டு அருளின், அறத்தின், ஆழியாகிய ராமன் தருமம் தவறித் தன் மீது அம்பு தொடுக்கமாட்டான் என்ற தன் உறுதியான நம்பிக்கையை வற்புறுத்தினன்.

ஆனால் தரும சமுத்திரத்தில் தருமம் தெரிந்தே சகோதர தருமத்தை நிலை குலையச் செய்து கொண்டிருந்த வாலி மூழ்கிப் போகிறான். சில குறைபாடுகள் உடையவனாயினும் தயாள உணர்ச்சியுடன் தருமம் துணையென்று துயரங்களைப் பொறுத்துக் கொண்டிருந்த சுக்கிரீவனோ நீந்திக் கரை பிடிக்கிறான்.

நெறிமுறை தவறியவன் எத்தகைய புயவலியும் வரபலமும் உடையவனாயினும் அவனது பலத்தை அரணாகக் கொண்டு தருமம் நிற்க முடியாது என்பது ராமன் கொள்கை. பெருநெறி பிடித்தே ஒழுகுதல் நலம் என்ற சங்கற்பத்துடன் இயன்றவரை முயன்று கொண்டிருப்பவனது பலவீனமே



மற்றையோனது பலத்தைக் காட்டிலும் மேலானது?

இது ராமனது தரும சிந்தனையின் போக்கு. வாலிக்குப் புரியாத போக்கு. லட்சுமணனுக்கே விளங்காத மனநிலை.

'தமையனைக் கொல்வதற்குக் கொடுங் கூற்றுவனாக உன்னை அழைத்து வந்திருக்கிறானே சுக்கிரீவன், இவனை அன்னியரான நாம் எப்படி நம்பியிருக்க முடியும்!' என்று கேட்டான், ராமனுக்காகவே தானும் நாடு துறந்து—தன மனைவியையும் துறந்து—வந்திருக்கும் லட்சுமணன், ராமனை நோக்கி. அதற்கு ராமன் பதில்,

எத்தாயர் வயிற்றினும்
பின்பிறந் தார்கள்
எல்லாம்



ஒத்தால் பரதன்பெரி(து)
உத்தம னாதல்
உண்டோ?

என்பதுதான்.

பரத லட்சியத்தை நோக்கும்போது பரதனைப் போல் உத்தம சகோதரனாக யாரே இருக்க முடியும் என்று தோன்றுகிறது ராமனுக்கே. சற்று நகைச் சுவையுடனும், பரதனையும் சந்தேகித்த இந்தத் தம்பிக்கே ஒரு பாடமாகவும் பேசினான்.

சுக்கிரீவனோ தம்பியாக அங்கீகரிக்கப்பட்ட பின் தானும் ராமனுக்கு உத்தம சகோதரனாகவே அமைய வேண்டுமென்று முயன்று கொண்டிருந்தானெனக் கருதலாம். ஆனால் சுக்கிரீவன் பரதனைத் தனக்கு லட்சியமாகக் கொள்ளத் துணியவில்லை. 'கொம்புத்தேனுக்கு முடவன் ஆசைப்பட்ட' கதை தெரியுமே!

குகனே லட்சிய சகோதரன் சுக்கிரீவனுக்கு. இது,

நாட்டிலே குகனார்
செய்த நன்மையை
நயக்க மாட்டேன்!

என்று சுக்கிரீவன் கூறுவதிலிருந்து ஊகிக்கப்படும்.

சுக்கிரீவனுக்குச் சகோதர பாசம் உண்டு.

வாலி நெறி தவறி நடந்த பின்பே அவனுக்கும் தனக்குமிடையே சகோதர பாசம் என்ற தெய்விக பாசம் இல்லையென்பதைச் சுக்கிரீவன் கண்டு கொண்டான்.

ராமபாணம் பட்டு வாலி மார்பிலிருந்து இரத்தம் பெருகுவதைக் கண்டதும் சுக்கிரீவன் மறுபடியும் சகோதர பாசத்தால் கட்டுண்டவனாய் அந்த ராமபாணம் தன்னையே தாக்கிச் சாய்த்து விட்டது போல் பூமியில் விழுந்து விடுகிறான்;

வாசத் தாரவன்
மார்பெனும்
மலைவழங்(கு)
அருவி
ஓசைச் சோரியை
நோக்கினன்,
உடன்பிறப்(பு)
என்னும்

பாசத் தால்பிணிப்
புண்டஅத் தம்பியும்
பசுங்கண்

நேசத் தாரைகள்
சொரிதர நெடுநிலம்
சேர்ந்தான்.

[வாசத் தாரவன் — வாசனையுள்ள மாலை யணிந்த வாலி. சோரி — இரத்தம். சொரி தர — சொரிய.]

இந் நிகழ்ச்சியிலிருந்து வாலி மட்டும் நெறி தவறாதிருந்தால் அவனுக்குச் சுக்கிரீவன் உத்தம சகோதரனாக இருந்திருக்கக்கூடும் என்று தெரிந்து கொள்ளலாம்.

சகோதர தருமத்தைக் கொலை செய்து விட்ட வாலி ராமனிடம், சகோதரர்களாகிய இருவரையும் பட்சபாதம் இல்லாமல் உற்றாராக் கொள்வதை விட்டு,

ஒருவர்மேல் கருணை
தூண்டி ஒருவர்மேல்
ஒளித்து நின்று

வரிசிலை குழைய
வாங்கி வாய்அம்பு
மருமத்(து) எய்தல்
தருமமோ?

என்று கேட்டான்.

அதற்கு விடையாக ராமன்,

ஏதி லாரும்
எளியர்என் றுரையும்

தீது தீர்ப்பதென்
சிந்தைக் கருத்தரோ

என்று பதில் சொன்னான்.

இதனால் வாலி செய்த கொடுமையின் விளைவாகச் சுக்கிரீவன் எத்தகைய எளிமை — நிலையிலிருந்து ராமனது அருளுக்கும் நட்புக்கும் உரியவனானான் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

வாலியும் மரணமடையும் நிலையில் சுக்கிரீவனுடைய உள்ளத்தை உள்ளபடியே தெரிந்து கொண்டான் எனலாம். தம்பியைத் தழுவக் கொண்டு தானே ஆறுதல் சொன்னான்; புத்திமதி சொன்னான்.

தம்பியின் குறைபாடுகளில் ஒன்றை ராமனிடம் தெரிவித்தான் வாலி. அது தான் அமிதமாக மதுபானம் செய்யும் பழக்கம். அதனால் புத்தி மயங்கிச் சுக்கிரீவன் தீவினை செய்யவும் கூடும் என்றான் வாலி. பின்னால் செய்யப் போகும் பிழையை முன் கூட்டியே ஊகித்துப் பேசினான் வாலி.

'அப்படித் தவறு செய்யும் போதும், என்மேல் ஏவிய பாணத்தை என் தம்பி மேல் ஏவிவிட வேண்டாம்!' என்று ராமனிடம் தான் சாகும்போது ஒரு வரமும் கேட்டுக் கொண்டான் வாலி.

இப்படி வாலி ஆணவம் ஒழிக்க நிலையில் பேசுவதற்கு உரிய சகோதரத் தன்மை சுக்கிரீவனிடம் இருக்க வேண்டுமென்று நாம் ஊகஞ் செய்வது தவறாகாது. இத்தகைய சகோதரப் பண்பு வாலிபால் கனிந்து வெளிப்படுவதற்கு வசதி ஏற்படவில்லை.

வானர குலம் விட்டு இட்சுவாகு குலம் பெற்று ராம சகோதரனான பின்பே சுக்கிரீவனது இதயத்திலுள்ள சகோதர நேசம் தனக்குரிய முழு வளர்ச்சியும் முதிர்ச்சியும் பெறுகிறது

வாலியின் சகோதரன் ராமனுக்கே 'உயிரனைய காதல் துணைவ'னாகிறான்.

சுக்கிரீவனை வரக்காணுகிற நிலையில் ராமன் உளம் நைந்து பேசுகிறான் என்றால், இந்த நட்பின் ஆழத்தையும் அகலத்தையும் என்னென்பது!

'தமியனேனுக்கு உயிர் தந்த உதவி போனே!' என்று ராமன் சொல்வதிலிருந்து சுக்கிரீவனது வசியமும் சகோதரப் பணியும் எவ்வளவு நன்றாக நிறைவேறி யிருக்க வேண்டும் என்பது புலனாகும்.

சுக்கிரீவனிடம் ராமன் பேசும் பேச்சே உத்தம நண்பன் அடித்தும் அணைத்தும் பேசும் பேச்சாக அமைந்து விடுகிறது.

விளையாடிப் பிழைப்ப
செய்தாய்!—

இது ஒரு பெற்ற தாய் அல்லது உற்ற கணவன் தன் ஆசை மகன் அல்லது அன்பு — மனைவியிடம் பேசும் பேச்சுத் தானே!

இந்த நட்பு-வேகம் சுக்கிரீவனுடைய இதயத்திலும் ஓடக் காண்கிறோம். 'காட்டுக் கழுகும் ஆற்றங் கரையில் வேடனும் அரக்கர் ஊரில் அநுமனும் எவ்வளவோ சாகசம் புரிந்து உன்னுடைய நட்புக்காதலுக்கு உரிமை பெற்று விட்டனர்; நானோ கால் வழி காட்டி வெறுங் கையுடன் வந்தும் அவ்வளவு காதலையும் பெற்றுக் கொண்டேன்!' என்று கவிழ்த்த தலை நிமிராது அந்த வேகத்தை வெளியிடுகிறான்.

வார்த்தைகளல்ல, இதயத்தோடு இதயம் தட்டும் போது எழுகின்ற பொறிகளல்லவா சுடர்கின்றன! அந்த ஓசை தானே இந்தப் பாட்டின் இசை!